Registered as a news paper.

பக்கங்கள் பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




அசல் 22 கரட் தங்கத்தில்
நவீன காலத்திற்கேற்ப
புதிய டிசைன்களில்
தங்க நகைகளை
செய்து பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்
சிறி கருமாரி நகையகம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
205/6, கஸ்தூரியார் வீதி,
ராஜா தியேட்டர் கட்டிடம்,
யாழ்ப்பாணம். தொ:பே: 222 5385.



மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 புரட்டாதி- 03 ஹிஜ்ரி 1428 சஃபான் 14 (19.09.2005) திங்கட்கிழமை இதழ்:354


## மட்டக்களப்பு - வாகனேரியில் தமிழ் இளைஞர் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாகனேரி பகுதியில் வைத்து - 23 வயது இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப் பட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மேதானந்த தேரருக்கு எதிராக சந்திரிகா சட்ட நடவடிக்கை!

கொழும்பு —

ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவெல மேதானந்த தேரருக்கு எதிராக, ஜனாதிபதி சட்ட நடவடிக்கை எடுக்கலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கலந்துகொண்ட கூட்டம் ஒன்றில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயிரம் பெண்கள் ஒன்றுதிரண்ட பொங்கு தமிழ் முன்னோடி நிகழ்வு!






யாழ்ப்பாணம்

பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வில் யாழ். மாவட்டத்திலுள்ள இலட்சக்கணக்கான பெண்களை ஒன்றுதிரட்டும் வகையில் ஆயிரம் பெண்கள் ஒன்றுகூடி நேற்று முன்னேற்பாடு நிகழ்வொன்றை நடத்தினர்.

இந்த நிகழ்வு நேற்றுக்காலை 10 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பெண்கள் பண்பாட்டு மையத் தலைவி திருமதி சி. ராஜ்குமார் தலைமையில் நடைபெற்றது.

இங்கு நாடாளுமன்ற (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் அதிகாரி கொலை; வழக்கை மாற்ற கோரிக்கை!

கொழும்பு —

இணுவிலில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் பொலிஸ் அதிகாரியான சாள்ஸ் விஜேவர்த்தன கொல்லப் பட்ட சம்பவம் தொடர்பாக வழக்கு விசாரணையை யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு மாற்றுமாறு பொலிஸார், சட்டமா அதிபரிடம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கட்சி எம்பிக்களும் வெளிநாடு செல்வதற்கு தடை!

கொழும்பு —

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் முடிவடையும் வரை ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொள்வதற்கு அந்தக் கட்சி தடைவிதித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை வெற்றிபெறச் (12 ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்காவிலிருந்து திரும்பியதும் சந்திரிகா பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை பதவி நீக்குவார்!

## போரும் சமாதானமும் நூல் லண்டனில் வெளியிடப்பட்டது!






லண்டன் —

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் ...

## கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்புத் தகவல்

கொழும்பு —



சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளுக்கு முரணான வகையில் மகிந்த ராஜபக்ஷ மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளால் கடும் விசனமடைந்துள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பியதும், பிரதமர் பதவியிலிருந்து மகிந்த ராஜபக்ஷவை நீக்கவோ, நாடாளுமன்றைக் கலைக்கவோ நடவடிக்கை எடுக்கலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (12 ஆம் பக்கம் பார்க்க)

## குறுகிய காலத்துக்குள் வெற்றிபெறும் நோக்கிலேயே தலைவர் செயல்படுகிறார்!



லண்டன் —

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதிய போரும் சமாதானமும் நூல் நேற்று முன்தினம் லண்டனில் வெளியிடப் பட்டது.

தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் 18 ஆம் ஆண்டு நிறைவு வணக்க நிகழ்வு லண்டன் நகரில் உள்ள கிறீன்போர்ட் அசெம்பிளி மண்டபத்தில் நடைபெற்றபோதே இந்த நூல் வெளியிடப்பட்டது. நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கலாநிதி அன்ரன் பாலசிங்கமும், அடேல் பாலசிங்கமும் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வில் பெருமளவிலான பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

# குறுகிய காலத்துக்குள் வெற்றிபெறும் நோக்கிலேயே தலைவர் செயற்படுகிறார்!

## தமிழீழ கடற்படை சிறப்புத் தளபதி கேணல் சூசை

ஆழியவளை —

இனிவரும் காலத்தில் இடம்பெறும் இராணுவப் பாய்ச்சல்கள் குறுகிய காலத்துக்குள் வெற்றியைப் பெற்றுத் தரவேண்டும் என்ற நோக்கிலேயே தமிழீழ தேசியத் தலைவர் ஒவ்வொரு நிகழ்வுகளையும் மேற்கொண்டு வருவதாக தமிழீழ கடற்படை சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் ஆழியவளை பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற லெப்.கேணல் மறவன் பயிற்சிப் பாசறையில் பயிற்சிபெற்ற கடற்புலிகளின் மூன்றாவது தொகுதி துணைப்படை வீரர்களின் பயிற்சி நிறைவு நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய போதே (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. மனித உரிமை அமைப்பிடம்

# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக விளக்கம் கோருகிறார் தயானந்த!

கொழும்பு —

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக உயர் நீதிமன்றம் அளித்திருக்கும் தீர்ப்புத் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் மனிதஉரிமை அமைப்புடன் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க ஆலோசனை நடத்தவுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை இந்த ஆண்டே நடத்தவேண்டுமென்று அடிப்படை மனிதஉரிமை மீறல் வழக்கை ஜாதிக ஹெல உறுமய கட்சியினர் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தனர்.

இதை ஏற்ற நீதிமன்றம் ஒக்ரோபர் 25 இற்கும்நவம்பர் 22 இற்கும் இடைப்பட்ட காலத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தவேண்மென்று உத்தரவிட்டது.

உயர்நீதிமன்ற உத்தரவின் சில பத்திகள் ஆட்சேபத்திற்குரியதெனக் கூறி தேர்தல் (12 ஆம் பக்கம் பார்க்க)

# உதவி வழங்கும் நாடுகள் இன்று நியூயோர்க்கில் முக்கிய சந்திப்பு!

## இலங்கை நிலைவரம் குறித்து ஆலோசனை

நியூயோர்க் —

இலங்கையில் தோன்றியிருக்கும் அரசியல் நெருக்கடி நிலை, போர் நிறுத்த உடன்பாட்டுக்கு எழுந்திருக்கும் அச்சுறுத்தல் மற்றும் நிதியுதவிகள் தொடர்பாக ஆராய இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகளின் அவசர கூட்டம் இன்று நியூயோர்க்கில் நடைபெறவுள்ளது.

அமெரிக்காவின் பிரதி இராஜாங்கச் செயலர் ஆர்மிரேஜ், ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி, நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார ஆணையாளர் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்.

இந்த விசேட கூட்டத்தில் இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் நிறுத்த (12 ஆம் பக்கம் பார்க்க)



EXPOAIR
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
Your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...


நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
மணிகண்டன், சிம்ரன், ஜெய்ஆகாஷ் மற்றும் பலர் நடித்த
கிச்சா வயது 16
காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

மனோகரா யாழ்ப்பாணம்
(இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு)
சிம்பு, கோபிகா மற்றும் பலர் நடித்த
தொட்டி ஜெயா
: (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

நிறைஞ்சனாஸ் சங்கானை
ஜெயம் புகழ் ரவி, ரேணுகா மேனன் நடித்த
தாஸ்
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

நாகம்ஸ் சுன்னாகம்
ரவிகிருஷ்ணா, கோபிகா, பிரகாஷ்ராஜ், ரேவதி மற்றும் பலர் நடித்த
பொன்னியின் செல்வன்
காட்சிகள்:- 11.00,3.00, 7.00,10.00 (பழைய நேரம்)

# சிறுதொகைப் பணம் கண்டெடுப்பு

யாழ்ப்பாணம்—

யாழ். செயலகத்தின் மோட்டார் திணைக்கள அலுவலகத்துக்கு அருகாமையில் சிறு தொகைப் பணத்துடன் கைப்பை ஒன்று கண்டெடுக்கப்பட்டு நிர்வாக உத்தியோகத்தர் அலுவலக காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அடையாளத்தைக் காட்டி அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

சிறு விளம்பரம்

வீட்டுடன் காணி விற்பனைக்கு

மருதனார்மடம் - மானிப்பாய் வீதியில் உடுவில் மகளிர் கல்லூரிக்குச் சமீபமாக பிள்ளையார் கோயிலடியில் கிணற்றுடன் சேர்த்து 3 அறைகள் கொண்ட சிறிய வீட்டுடன் சற்சதுரமான 5 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை) தொடர்பு:- 021-4591072, 0777291833.
(2063)

ராஜா யாழ்ப்பாணம்
2ஆவது ஜனத்திரள் வாரம்
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு -
நியூ புகழ் - எஸ்.ஜே.சூர்யா, நிலா

அன்பே ஆருயிரே
இசை - A.R. ரகுமான்
ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்
பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

# எமது உள்ளக் கிடக்கையை சர்வதேசத்துக்கு கூற பொங்கு தமிழில் அனைவரும் அணி திரள்வோம்

## - விவசாயபீட மாணவர் ஒன்றியம் அறைகூவல் -

யாழ்ப்பாணம்—

யாழ். பல்கலைக்கழக சமூகம் எதிர்வரும் 30ஆம் திகதி நடத்தவுள்ள பொங்குதமிழ் நிகழ்வில் நாம் அனைவரும் அணிதிரண்டு எமது உள்ளக் கிடக்கையை சர்வதேச சமூகத்துக்கு உரத்துக் கூறுவதுடன், எமது ஒற்றுமையையும் சர்வதேச சமுகத்துக்கு எடுத்துக்காட்டுவோமென யாழ். பல்கலைக்கழக விவசாயபீட மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

யாழ். பல்கலைக்கழக சமூகம் எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ். குடாநாட்டில், நடத்தும் பொங்குதமிழ் நிகழ்வுக்கு விவசாய பீட மாணவர் ஒன்றியம் தனது முழுமையான ஆதரவை வழங்குகின்றது.

காலம் காலமாக எமது மக்களின் அழமனதில் புதைந்து கனன்று கொண்டிருக்கும் எமது உரிமைக் குரலை உலகிற்கு உரத்துக் கூற பொங்குதமிழில் அணிதிரள்வோம்.

வவுனியா பிரகடனத்துக்கு வலுச் சேர்க்கும் முகமாக எமது நீண்ட நாள் கோரிக்கையான தனிநாட்டுக் கோரிக்கையை உறுதிப்படுத்தும்விதமாக அனைவரும் அணிதிரள்வோம்.

அரச நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கடற்தொழிலாளர் சமாசங்கள், விவசாய சம்மேளனங்கள், மதஸ்தாபனங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள், பாடசாலைகள், ஆசிரிய கலாசாலை, கல்வியியற்கல்லூரி, மாணவர் ஒன்றியங்கள், சனசமூக நிலைய அமைப்புகள், கிராம முன்னேற்ற அமைப்புகள் என அனைவரும் ஒன்றிணைந்து சிவப்பு, மஞ்சள் கொடிகளைப் பறக்க விட்டும், மக்களிடையே பொங்குதமிழ் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துமாறும் கேட்டுக் கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொங்கு தமிழ் குறித்து விளக்கவுரை நிகழ்வு

யாழ்ப்பாணம்—

எதிர்வரும் 30 ஆம்திகதி முன்னெடுக்கப்படவுள்ள மாபெரும் பொங்கு தமிழ் குறித்து விளக்கும் வகையில், யாழ். மாவட்ட சிற்றூர்தி மற்றும் முச்சக்கரவண்டிச் சங்கங்களின் ஏற்பாட்டில் நேற்று மாலை யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் பொங்கு தமிழ் விளக்கவுரை நிகழ்வு இடம்பெற்றது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சிற்றூர்தி, முச்சக்கரவண்டி சங்கங்களின் பிரதிநிதிகள், சாரதிகள் ஆகியோர் கலந்துகொண்ட இந்த நிகழ்வில், முன்னெடுக்கப்படவுள்ள மாபெரும் பொங்கு தமிழ் நிகழ்வுக்கு யாழ். மாவட்ட முச்சக்கரவண்டி, சிற்றூர்தி சாரதிகள் ஆகியோரின் பங்களிப்பு குறித்து விளக்கவுரைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் முச்சக்கர வண்டி, சிற்றூர்தி சங்கங்களின் பிரதிநிதிகள் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரன், சிவனேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.


டிஜிற்றல் போட்டோ கொப்பி
$A_4$ - கறுப்பு வெள்ளை - 3.00 ரூபா
$A_4$ - கலர் - 40.00 ரூபா
(சி/4609)
ஷூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்
62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# பட்டதாரிகளின் நியாயமான கோரிக்கைக்கு தமிழ்க் கூட்டமைப்பு ஆதரவை வழங்கும்

## ரவிராஜ் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம்—

பட்டதாரிகளின் நியாயமான கோரிக்கைகளுக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எப்பொழுதும் ஆதரவை வழங்குமெனக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களின் கோரிக்கைகள் தொடர்பாக நேற்று யாழ். கல்வி வலயப் பணிமனையில் நடைபெற்ற கலந்துரையாடலில் பட்டதாரிகள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

பட்டதாரிகளின் நிரந்தர நியமனம் தொடர்பாக வடக்கு - கிழக்குமாகாண கல்வி அமைச்சுடன் நான் தொடர்பு கொண்டு ஆசிரிய பயிலுனர் நியமனம் பெற்றவர்களுக்கும், புதிதாக வெளியேறிய பட்டதாரிகளுக்கும் நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டேன்.

பயிலுநர் பட்டதாரி ஆசிரியர்களுக்கு அவர்கள் நியமனம் பெற்ற திகதியை நியமனத் திகதியாக வைத்து அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் என்பதிலும், அதேபோல் ஏனைய ஆசிரிய நியமனத்துக்கென விண்ணப்பித்த பட்டதாரிகளுக்கும் ஆசிரிய நியமனம் வழங்கப்படவேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம்.

அத்துடன், பட்டதாரிகள் தமக்கு அருகிலுள்ள இடத்தில் நியமனம் வழங்கப்படவேண்டும் என எதிர்பாராது தமக்கு எங்கு நியமனம் கிடைக்கப் பெற்றாலும் அங்கு சேவையாற்ற முன்வரவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

நேற்றைய இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ந.ரவிராஜ், கஜேந்திரன், தமிழர் ஆசிரியர் சங்க துணைச் செயலாளர் பஞ்சலிங்கம், யாழ். மாவட்ட தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் கணேசமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்—

யாழ். மாவட்ட பூப்பந்தாட்டச் சங்கம், வர்த்தக வங்கி - யாழ்ப்பாணம், சிறிலங்கா பூப்பந்தாட்டச் சங்கம் ஆகியவற்றின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட கனிஷ்ட பிரிவு தேசிய பூப்பந்தாட்டப் போட்டிக்கான பரிசளிப்பு இன்று மாலை 3.30 மணிக்கு யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி பூப்பந்தாட்ட மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த விழாவுக்கு வர்த்தக வங்கியின் முகாமையாளர் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

நமது ஈழநாடு

மூன்றாம் ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்படும் கலை - இலக்கிய போட்டிகள்

நமது ஈழநாடு பத்திரிகையின் மூன்றாம் ஆண்டு நிறைவையொட்டி கலை - இலக்கியப் போட்டிகளை நடத்துவதற்கு தீர்மானித்திருப்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

போட்டிகளுக்கான விதிகள்

சிறுகதை மற்றும் கவிதைப்போட்டி

- படைப்புக்கள் யாவும் படைப்பாளியின் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும். மொழிபெயர்ப்புக்கள் நிராகரிக்கப்படும்.
- சிறுகதை யாவும் தெளிவான எழுத்தில் எழுதப்பட்டோ தட்டச்சு செய்யப்பட்டோ இருத்தல் வேண்டும். கையெழுத்தில் 7 பக்கங்களுக்குள்ளும் தட்டச்சில் 6 பக்கங்களுக்குள்ளும் இருப்பது நல்லது.
- கவிதைகள் மரபுக்கவிதையாகவோ அல்லது புதுக்கவிதையாகவோ இருக்கலாம். எதுவானாலும் 20 முதல் 50 வரிகளுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்கள் யாவும் சமகால சமூக்வியல் - வாழ்வியல் பிரச்சினைகளை மையமாகக் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு:- இந்தப் போட்டிகளில் நமது ஈழநாடு நிறுவன ஊழியர்கள் எவரும் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

மேற் பிரிவு

தலைப்பு - தமிழ் மாணவர்களின் கல்வியும்... வெகுசனத் தொடர்பு ஊடகங்களும்.

மத்திய பிரிவு

தலைப்பு - தமிழ் மாணவர்களும் வாசிப்புப் பழக்கமும்

நிபந்தனைகள்

- கட்டுரைகள் சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும்.
- கட்டுரைகள் அனுப்பும் போது பாடசாலையில் கற்கும் தரம் குறிப்பிடப்பட்டு அதிபரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
- கட்டுரைகள் ஆகக்குறைந்தது 1500 சொற்களுக்கு குறையாமலும் 2000 சொற்களுக்கு மேற்படாமலும் இருத்தல்வேண்டும்.
- கட்டுரையை தேர்ந்தெடுப்பதில் நடுவர் குழுவினது தீர்ப்பே இறுதியானது.

ஆக்கங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 25.09.2005

போட்டிக்கான ஆக்கங்கள் அனுப்பவேண்டிய முகவரிகள்:

கலை இலக்கிய கட்டுரைப்போட்டி
"நமது ஈழநாடு"
267 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

நமது ஈழநாடு பணிமனை
யாழ்.சாலை
கிளிநொச்சி.

## கவிஞர் முருகையனைக் கௌரவிக்கும்

# கலை, இலக்கிய ஒன்றுகூடல் நேற்று சிறப்புற நடைபெற்றது




யாழ்ப்பாணம்—

மூத்த கவிஞர் கலாநிதி இ.முருகையனின் அகவை 70 ஆவது நிறைவு குறித்த கலை, இலக்கிய ஒன்றுகூடல் நிகழ்வு நேற்று மாலை 3.30 மணியளவில் திருநெல்வேலி இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது.

தமிழ் இலக்கியப் பேரவைத் தலைவர் க.தணிகாசலம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மூத்த கவிஞர் கலாநிதி இ.முருகையனுக்கான வாழ்த்துரையை ஏ.ஜே. கனகரட்ணா, குழந்தை ம.சண்முகலிங்கம், பேராசிரியர் சிவலிங்கராஜா, சி.கா.செந்தில்வேல், கலாநிதி செ.திருநாவுக்கரசு, ஈஸ்வரி தர்மலிங்கம் ஆகியோர் வழங்கினர்.

இதனையடுத்து, மூத்த கவிஞர் முருகையனின் கட்டுரை குறித்து பேராசிரியர் அ.சண்முகதாஸ், கவிதைகள் குறித்து பேராசிரியர் சிவசேகரம், நாடகங்கள் குறித்து தே.தேவானந்தா ஆகியோர் மதிப்பீட்டுரைகளை நிகழ்த்தினர். தொடர்ந்து 'கவிதைக்குள் உயிர் ஒன்றி வாழ்' என்னும் தலைப்பில் கவியுரையும் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு கவிஞர்கள், கலை, இலக்கிய ஆர்வலர்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

# யோகாசன பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம்—

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நாவலர் மணிமண்டபத்தில் யோகாசன தியான வகுப்புகளுக்கான புதிய பிரிவை ஆரம்பிக்கவுள்ளது.

இந்த புதிய பிரிவில் ஆண்கள், பெண்கள், நோயாளர்கள் எனத் தனித்தனியாக வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளதால், பயில விரும்புவோர் தமது பெயரை நாவலர் மணி மண்டபத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# வணிகபீட மாணவருக்கான அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்—

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட மாணவர்களுக்கான கலந்துரையாடலொன்று இன்று காலை 10 மணியளவில் வணிகபீட விரிவுரை மண்டபம் 1 இல் இடம் பெறவுள்ளது.

இதில் முதலாம் வருட மாணவர்கள் தவிர்ந்த அனைத்து வருட மாணவர்களையும் சமுகமளிக்குமாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுக்கொண்டுள்ளது.



தொடர்ச்சியாக 69 மணித்தியாலங்கள், 48 நிமிடங்கள் தொலைக்காட்சி பார்த்து கின்னஸ் சாதனை படைத்த இலங்கைத் தமிழரான சுரேஷ் ஜோக்கிம் சாதனை நிகழ்த்தியபோது எடுக்கப்பட்ட படம்

# யுத்தமா-சமாதானமா என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு—

இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் சமாதானமாகத் தீர்வுகாண்பதா அல்லது யுத்தத்துக்குச் சென்று நாட்டைப் பிளவுபடுத்துவதா என்பது தொடர்பாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தீர்மானிக்கவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

காலி - ஹினிதும பிரதேசத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசியபோதே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர் -

வடக்கு - கிழக்குப் பிரச்சினையை பேச்சுவார்த்தைமூலம் தீர்த்துக்கொள்ளவேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ச்சியாகக் கூறிவருகின்ற போதிலும்- ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறுமயவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் உடன்படிக்கையானது மீண்டும் யுத்தத்தை நோக்கியே நாட்டைத் தள்ளப்போகிறது.

தங்களின் அதிகார ஆசைக்காக ஒவ்வொருவரும் கொள்கைகளை மாற்றிக்கொள்ள ஆரம்பித்தால் விடுதலைப் புலிகள் தங்களின் தனிநாட்டுக் கோரிக்கையை சர்வதேச சமூகத்தின் முன் நியாயப்படுத்துவதே நிகழும்.

சுனாமி நிவாரணசபை சந்திரிகாவின் யோசனையே. அத்துடன், போர்நிறுத்த உடன்படிக்கையை காக்கவேண்டுமெனவும் அவர் கூறிவருகிறார்.

நோர்வேயை மத்தியஸ்தப்



பணிக்கு அழைத்ததும் சந்திரிகாவே தான். 1994 ஆம் ஆண்டு முதல் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு திறந்த பொருளாதாரக் கொள்கையை செயற்படுத்திவருகிறது.

எனினும், பிரதமர் அவை அனைத்தையும் ரத்துச்செய்ய உடன்பட்டுக்கைச் சாத்திட்டுள்ளார்.

பிரதமர் தன்னைத் தாக்குதவதற்காகவே இவையனைத்தையும் இரத்துச் செய்யும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார். அதனால் சந்திரிகாதான் தாக்கப்பட்டார் என ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார். (தே)

# சுனாமியால் இடம்பெயர்ந்தோருக்கு வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதில் நெருக்கடி!

கொழும்பு—

சுனாமியால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ள சுமார் 3 லட்சம் மக்களுக்கான வாக்களிப்பு நிலையங்களை ஏற்படுத்துவதில் தேர்தல் திணைக்களம் பெரும் சிரமங்களுக்கு முகம்கொடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தல் சட்டம் மற்றும் பொதுத் தேர்தல் சட்டத்திற்கமைய வாக்காளர் ஒருவருக்கு தான் வசிக்கும் தேர்தல் தொகுதிக்கு வெளியேயிருக்கும் வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிக்க முடியாது.

அதனால் சுனாமியால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்திருக்கும் சுமார் 3 லட்சம் வாக்காளர்களுக்கு அவர்களின் வாக்குகளை அளிப்பதற்கான ஒழுங்குளைச் செய்து கொடுப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சிக்கலுக்குத் தீர்வுகாண்பதற்காக அனைத்து மாவட்ட செயலாளர்களையும் தேர்தல் செயலகத்திற்கு அழைத்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தேர்தல் ஆணையாளர் தீர்மானித்துள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்டு முன்னர் வசித்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தற்காலிகமாக வசிக்கும் வாக்காளர்களுக்கு வாக்களிப்பதற்கென அவர்கள் தற்போதிருக்கும் இடங்களில் வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதா அல்லது அவர்கள் முன்னர் வசித்த இடங்களில் வாக்களிப்பிற்கான ஒழுங்குகளைச் செய்து கொடுப்பதா என்பது குறித்து இந்தச்சந்திப்பில் விரிவாக ஆராயப்படலாம் எனத் தெரியவருகிறது.

இதுபோன்ற விடயங்களாலேயே தேர்தல் நடைபெறும் திகதி பற்றிய வர்த்தமானி அறிவிப்பை வெளியிட தாமதமாவதாகவும் தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் கூறுகின்றன. (தே)

# ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்துக்கும் தலா பத்து தேர்தல் அதிகாரிகள்!

கொழும்பு—

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்துக்கும் தலா 10 தேர்தல் அதிகாரிகளைப் பணியில் ஈடுபடுத்த தேர்தல் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் 10 ஆயிரம் வரையான வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படுமெனவும் தேர்தல் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ள அதிகாரிகள் தொடர்பான விபரங்களை வழங்குமாறு - அரசநிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களுக்கு தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

2003 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலைவிட 2004 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியல் இரண்டு இலட்சம் வாக்காளர்களால் அதிகரித்துள்ளதால் இந்த முறை வாக்களிப்பு நிலையங்களின் எண்ணிக்கை மாறுபடலாமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# கடற்புலிகளின் முன்னணி பலம் சுனாமியால் அழிந்துவிட்டதாம்!



## சொல்கிறார் அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த

கொழும்பு—

சுனாமி அனர்த்ததால் கடற்புலிகளின் மூன்றில் இரண்டு பங்கு பலம் அழிந்துவிட்டது. எனவே விடுதலைப்புலிகள் மீண்டுமொரு யுத்தத்தில் ஈடுபடமாட்டார்களென மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்தார்.

அரங்கல எனுமிடத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தனதுரையில் -

விடுதலைப்புலிகள் மீண்டுமொரு யுத்தத்தில் ஈடுபட்டால் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற அமைப்புகள் அவர்களைத் தடைசெய்வர். இதனால் விடுதலைப் புலிகளுக்கு கிடைக்கும் உதவிகள் நிறுத்தப்படும்.

ஐ.தே.கட்சி மேற்கத்தைய நாடுகளூடாக நோர்வேயை முன்வைத்து சுனாமி பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்தியதன் நோக்கம் - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை உடைப்பதற்காகும். இதன்படி எமது முன்னணியும் உடைந்தது.

விடுதலைப்புலிகள் கூறுகின்ற அனைத்தையும் எடுத்துக்கொண்டு நாம் தலைகவிழ்ந்துகொண்டிருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் நாளொன்றுக்கு இருவர் மூவராக விடுதலைப் புலிகளால் கொல்லப்படுகின்றனர்.

நாம் பலமில்லாதுவிடின் அவர்கள் எம்மை அழித்து விடுவார்கள் இதுதடிகொடுத்து அடிவாங்குவதைப் போன்றது.

போர்நிறுத்த உடன்பாட்டை மேலும் பலமுள்ளதாக மாற்றவேண்டுமென மக்களிடையே கருத்துள்ளது. தன்னாட்சி அதிகாரம் அல்லது சுயநிர்ணய உரிமை என்ற தமது கோரிக்கையை புலிகள் இதுவரை கைவிடவில்லை.

பலவித அர்ப்பணிப்புகளின் மத்தியில் ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமயவுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதெனவும் அவர் தெரிவித்தார். (தே)

# நீதியான தேர்தலை நடத்தும் வகையில் கடமைகளை நிறைவேற்ற வேண்டும்!

## பொலிஸ் அதிகாரிகளுக்கு ஆலோசனை

கொழும்பு—

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்தவகையிலான அழுத்தங்கள் ஏற்பட்டாலும், எந்தக் கட்சிக்கும் பாதிப்பு ஏற்படாத நீதியான தேர்தலை நடத்தும் வகையில் கடமைகளை நிறைவேற்றுமாறு - பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ அனைத்து பொலிஸ் அதிகாரிகளுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

வன்செயல்களற்ற நீதியான தேர்தலை நடத்தும் வகையில் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன்- ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களுக்குத் தேவையான பாதுகாப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண மற்றும் அதன் பணிப்பாளராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.எம்.பெரேரா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அனைத்து தேர்தல் தொகுதிகளிலும் ஏற்படுத்தப்பட்டுள்ள பொலிஸ் தேர்தல் நடவடிக்கைப் பிரிவுகளை மீண்டும் செயற்படுத்துவதற்கு பொலிஸ் தலைமையகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது.

அத்துடன் கடந்த தேர்தல்




களில் வன்முறைகளில் ஈடுபட்டுள்ளோரின் பெயர் விபரங்களைத் தயாரித்து அவர்களை கண்காணிப்பதற்குப் பொலிஸ் தலைமையகம் தயாராகிவருவதாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்தார்.

வன்முறைகள் அதிகமுள்ள பிரதேசங்கள் என அறிவிக்கப்பட்ட பகுதிகளுக்கு விசேட பாதுகாப்பு வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேர்தல் சட்டத்தை மீறி அமைக்கப்பட்டுள்ள பதாகைகள், சுவரொட்டிகளை அகற்றும் நடவடிக்கைகளிலும் பொலிஸார் ஈடுபடவுள்ளனர் எனவும் கூறியுள்ளார். (தே)

# சமஷ்டியை அறிமுகப்படுத்துவதாக ரணில் ஏன் உறுதியளிக்கவில்லை!

## கேள்வி எழுப்புகிறார் விமல் வீரவன்ச



கொழும்பு—

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு எவ்வித கொள்கைகளும் கிடையாது என்று கூறிவரும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம்தான் எவ்வித கொள்கைகளும் இல்லையென ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

சுயாதீன தொலைக்காட்சியில் இடம்பெறும் வாராந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஒன்றுபட்ட அரசு என்பதில் உறுதியாக உள்ளார். ஆனால், ரணில் விக்கிரமசிங்க சமஷ்டித் திட்டத்தை அறிமுகப்படுத்துவாரா இல்லையா என்பதை உறுதியாக இதுவரை தெரிவிக்கவில்லை.

தனிநாட்டுக்காகப் போராடுகின்றனர் என்பதை விடுதலைப் புலிகள் இதுவரை மறுக்கவில்லை. அரசாங்கம் பயங்கரவாதக் குழுக்களைத் தவிர்த்து நிலையான கொள்கையைப் பின்பற்றவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# சப்பல் குறித்த கங்கூலியின் கருத்து; முன்னாள் வீரர்கள் பலரும் அதிருப்தி!



புதுடெல்கி—

இந்திய அணியின் பயிற்சியாளர் கிரேக் சப்பல் குறித்து கங்கூலி கூறிய கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளதுடன், முன்னாள் வீரர்கள் பலரும் கங்கூலி மீது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

இது சம்பந்தமாக முன்னாள் கப்டன் கபில்தேவ் கூறுகையில் -

இந்தப் பிரச்சினை எல்லா வகையிலும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. கங்கூலியின் மன வேதனையை எங்களால் புரிந்துகொள்ளமுடிகிறது. இருந்தாலும் அவர் சதமடித்துவிட்டு, இப்படி விமர்சித்துப் பேசியிருப்பது ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. அதிக ஓட்டங்கள் எடுக்காமல் இருந்தால், அவர் இதை வெளியே சொல்லியிருப்பாரா?

நான் இருவருக்குமே சொல்லிக் கொள்வது என்னவென்றால், இது போன்ற பிரச்சினைகள் எழுவது அணிக்கு சரியானதும், நல்லதுமல்ல. அதுவும் உலகக் கிண்ணப் போட்டிக்கு தயாராகிக் கொண்டிருக்கும் நேரத்தில் இப்படி ஒரு சம்பவம் நடந்திருக்கவே கூடாது.

ஒரு அணிக்கு மிகப்பெரிய வலுவே ஒற்றுமையில்தான் இருக்கிறது. எனவே இனிமேலும் இது போன்ற பாதிக்கக்கூடிய சம்பவங்கள் நிகழக் கூடாது. கப்டன் என்ற முறையில் கங்கூலி எல்லா வகையிலும் அணிக்கு சாதகமாக நடந்துகொள்ளவேண்டுமென கபில்தேவ் கூறினார்.




முன்னாள் வீரர் பிஷன்சிங் பேடி இது குறித்து கருத்து வெளியிடுகையில் - இந்திய அணிக்கு கங்கூலியை விட கிரேக் சப்பல் அதிகம் தேவைப்படுகிறார். கங்கூலி வேண்டுமானால் வெளியேறட்டும். சப்பல் அணியின் நலன்கருதி தனது எண்ணத்தை கங்கூலியிடம் சொல்லியிருக்கிறார். இதை கங்கூலி வெளியே சொல்ல வேண்டுமா? இதனால் நமது அணியைப் பற்றி மோசமான விளம்பரம் ஏற்பட்டுவிட்டது. ஒரு கப்டனே ஒழுங்கீனமாக நடந்துவிட்டாரெனக் கூறினார்.

அதேவேளை, அஜித் வடேகர் கருத்துக் கூறும்போது - கிரேக் சப்பல் 4 சுவருக்குள் சொன்ன விடயத்தை, கங்கூலி வெளிப்படையாகக் கூறியிருக்கக்கூடாது. நான் பயிற்சியாளராக இருந்தபோது கூட வீரர்களிடம் இது போன்று கூறியிருக்கிறேன். அது வெளியே வந்ததில்லை. அதேநேரத்தில், கப்டனை மாற்றுவது பயிற்சியாளரின் வேலையில்லை. இதற்கு தெரிவுக்குழு இருக்கிறது. இத்தகைய பிரச்சினை அணிக்கு பாதகத்தை ஏற்படுத்திவிட்டது.

கப்டனுக்கும் பயிற்சியாளருக்கும் மோதல் போக்கு இருப்பது நல்லதல்ல. கிரிக்கெட் சபை உரிய ஒழுங்கு நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ளவேண்டுமெனத் தெரிவித்தார்.

இதேவேளை, கிரண்மோரே கூறுகையில் - அணியில் ஒழுங்கீனம் ஏற்படுவது மிகப்பெரிய பாதிப்பை உருவாக்கிவிடும். கிரிக்கெட் சபை காலம் தாழ்த்தாமல் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். உடை மாற்றும் அறையில் நடக்கும் விடயம் வெளியே வருவது நல்லதல்லதெனக் கூறியுள்ளார்.

# முஸ்லிமாக மாறினார் யுகானா!



இஸ்லாமாபாத்—

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் துணைக் கப்டன் யூசுப் யுகானா, இஸ்லாம் மதத்துக்கு மாறிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த இவர், அணியிலுள்ள ஒரே கிறிஸ்தவராக இருந்தார்.

தற்போது யுகானா முஸ்லிம் மதத்துக்கு மாறிவிட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. சமீபத்தில் யுகானா முஸ்லிம்களின் புனித நகரான மக்கா சென்றார். அங்கு வைத்து அவர் மதம் மாறியதாகக் கூறப்படுகிறது.

அவர் மதம் மாறியமை குறித்து யுகானா தரப்பிலிருந்து எந்தத் தகவலும் வெளியாகவில்லை. ஆனால், சக வீரர்கள் அவர் மதம் மாறியதை உறுதி செய்துள்ளனர்.

# பாடசாலை அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள்

யாழ்ப்பாணம்—

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தால் யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு பாடசாலை அணிகளிடையே நடத்தப்படும் 30 ஓவர்கள் கொண்ட தோல்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று நான்கு ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

இன்று காலை 8.30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் - யாழ். இந்துக் கல்லூரியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரியும்,

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரியை எதிர்த்து ஸ்கந்தவரோதயா கல்லூரியும் மோதவுள்ளன.

பிற்பகல் 1 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியை எதிர்த்து சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியும்,

ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியை எதிர்த்து வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியும் மோதவுள்ளன.

## விளையாட்டு

# ஆனையூர் யூனியன் கழகம் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி; ஏ2கே, பிரெண்ட்ஸ் அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம்—

ஆனையூர் யூனியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் ஒன்பது பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டங்களில் ஏ2கே அணியும் பிரெண்ட்ஸ் விளையாட்டுக் கழகமும் வெற்றிபெற்றன.


நேற்றுமுன்தினம் யூனியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஏ2கே அணியை எதிர்த்தாடிய நியூஸ்ரார் அணி 12 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 32 ஓட்டங்களைப் பெற்றது. சயந்தன் 11 ஓட்டங்களைப் பெற்றார். ஏ2கே அணி வீரர்கள் நாகதாஸ், யசோதரன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஏ2கே அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 33 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. சாருக் 10 ஓட்டங்களைப் பெற்றார். நியூஸ்ரார் விளையாட்டுக் கழக வீரர் கவாஸ்கர் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து மாலை மானிப்பாய் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்தாடிய மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் 12 ஓவர்களில் 32 ஓட்டங் களை மட்டுமே பெற்றது. சிவாஸ்கர் 11 ஓட்டங்களைப் பெற்றார். பிரெண்ட்ஸ் விளையாட்டுக் கழக வீரர் கஜேந்திரன் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பிரெண்ட்ஸ் அணி, 2 விக்கெட்டுக்களை இழந்து 33 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. இதில் வேணு 13 ஓட்டங்களைப் பெற்றார். மானிப்பாய் பரிஷ் அணி வீரர்கள் சாத்வீகன், சிவாஸ் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

# தென்னாபிரிக்க லெவன் அணி கலிஸ் லெவனை வென்றது!



கேப்ரவுண்—


தென்னாபிரிக்க லெவன் அணிக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் கலிஸ் அணி 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைச் சந்தித்தது.

தென்னாபிரிக்க லெவன் - கலிஸ் அழைப்பு லெவன் அணிகளிடையேயான ஒரு நாள் கிரிக்கெட் போட்டி, கேப்ரவுணில் நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்று முதலில் ஆடிய தென்னாபிரிக்க லெவன் அணி 49.1 ஓவர்களில் 258 ஓட்டங்களைச் சேர்த்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

அதிகபட்சமாக கப்டன் சிமித் 69, பொலக் 57, பிரின்ஸ் 54 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தார். கலிஸ் லெவன் தரப்பில் நியாம் 3 விக்கெட்டுக்களையும், சமி, டொனால்ட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், குளூஸ்னர், கலிஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

259 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற நிலையில் பின்னர் கலிஸ் அணி ஆடியது. வெற்றியை நோக்கிச் சென்ற கலிஸ் அணி பலத்த பரபரப்புக்கு இடையே 50 ஓவர்களின் முடிவில் 255 ஓட்டங்களை எடுத்தது. இதன் மூலம் தென்னாபிரிக்க அணி 3 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

சல்மான் பட் சிறப்பாக ஆடி சதமடித்தார். அவர் 102 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். குளூஸ்னர்



44, லாறா 31, கேஸ்டன் 22, ஜொன்டி றொட்ஸ் 12 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

தென்னாபிரிக்க தரப்பில் ஹோல் 3, போஜே 2, பொலக், என்ரினி, லாங்வெல்ட் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை கைப்பற்றினர்.

# சச்சின் டெண்டுல்கர் நாளை பெங்களூரில் களமிறங்குகிறார்

மும்பை —

இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் டெண்டுல்கர் பெங்களூரில் இன்று தொடங்கவிருக்கும் கனரா வங்கி நூற்றாண்டு கிரிக்கெட் போட்டியில் களமிறங்கவுள்ளார். இதை கனரா வங்கியின் அதிகாரியும், முன்னாள் கிரிக்கெட் வீரருமான சுனில் ஜோஷி நிருபர்களிடம் தெரிவித்தார்.

எம்.ஆர்.எப் அணி உட்பட 15 அணிகள் இந்தப் போட்டியில் கலந்துகொள்வதாகவும், டெண்டுல்கர் எம்.ஆர்.எப் அணி சார்பாக விளையாட இருப்பதாகவும், இதை டெண்டுல்கரே உறுதி செய்துள்ளதாகவும் சுனில் ஜோஷி கூறினார்.

இந்தப் போட்டியில் இந்திய அணியின் மற்றைய பிரபல ஆட்டக்காரர்களான எல்.பாலாஜி, டோனி, ஜே.பி. யாதவ், ஆர்.பி.சிங், சுரேஷ் ரெய்னா ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர். இறுதிப் போட்டி இம்மாதம் 27ஆம் திகதி நடைபெறவுள்ளது.

டெண்டுல்கர் பங்கேற்கும் எம்.ஆர்.எப் அணி நாளை இந்தியன் எயார் லைன்ஸ் அணியுடன் மோதவுள்ளது. இதில் டெண்டுல்கர் சிறப்பாக விளையாடும் பட்சத்தில் அவர் முழு உடற் தகுதி பெற்றுவிட்டா ரென்பது நிருபணமாகும்.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள சுப்பர் சீரிஸ் போட்டிக்கு டெண்டுல்கர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். உலக லெவன் அணியில் அவரின் பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இம்மாதம் 21ஆம் திக



திக்கு முன்னதாக அவரின் உடல் நிலை தகுதியை உறுதி செய்யும்படி காலக்கெடு விதிக்கப்பட்டிருந்தது. இந்தநிலையில் தகுதியை நிரூபிக்க டெண்டுல்கர் நாளை களமிறங்குவார்.

# இங்கிலாந்து அணியின் சவாலை எதிர்கொள்ள தயாராக உள்ளோம்

## பாகிஸ்தான் அணி கப்டன் இன்சமாம்

கராச்சி —

இங்கிலாந்து அணியின் சவாலை எதிர்கொள்ளத் தயாராக உள்ளோம் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் கப்டன் இன்சமாம் தெரிவித்தார்.

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் தொடரைக் கைப்பற்றிய இங்கிலாந்து அணி இந்த வருட கடைசியில் பாகிஸ்தானில் பயணம் செய்து 3 டெஸ்ட் மற்றும் 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கவுள்ளது.

இந்தநிலையில் இந்தத் தொடர் குறித்து பாகிஸ்தான் அணியின் கப்டன் இன்சமாம் பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது -

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் தொடரில் இங்கிலாந்து அணி சிறப்பாக ஆடினாலும், அந்த அணி தோற்கடிக்க முடியாத அணி ஒன்றும் கிடையாது. இங்கிலாந்து அணியின் சவாலை எதிர்கொள்ள தயாராக உள்ளோம்.

பாகிஸ்தானில் சூழ்நிலை வித்தியாசமாக இருக்கும். எனவே, இங்கிலாந்துக்கு இந்தச் சுற்றுப் பயணம் கடினமாக இருக்கும். முக்கியமாக பந்துவீச்சாளர்களுக்கு அதிக நெருக்கடியாக இருக்கும். இங்கிலாந்தை எதிர்கொள்ள தற்போதே தயாராகி வருகிறோம்.



பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர்கள் முழு உடல் தகுதியுடன் இல்லை. எனவே, இந்தப் பயணத்தின் போது சுழற்பந்து வீச்சாளர்களை அதிகம் பயன்படுத்தவுள்ளோம். சுழற்பந்து வீச்சாளர் முஸ்தாக் அகமட் மீண்டும் அணிக்கு அழைக்கப்படவுள்ளார். இவ்வாறு இன்சமாம் கூறினார்.

# இன்றைய கிரிக்கெட் ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்—

யாழ்.மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் ஏற்பாடு செய்த யாழ்.மாவட்ட பாடசாலை அணிகளின் 15 வயதுப் பிரிவு அணிகளிடையேயான கிரிக்கெட் இறுதிப் போட்டி இன்று சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. (58)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தென்மராட்சி விரைவில் நவீனமயப் படுத்தப்படும்!

## அரச அதிபர் கணேஷ்



மட்டுவில்

அரசாங்க அலுவலர்கள் எவரும் தங்களை அதிகாரிகளாக எண்ணாது, மக்களுக்குச் சேவை செய்யும் தொண்டர்களாக நினைத்துப் பணியாற்றவேண்டும். எத்தனையோ இடர்பாடுகளைச் சந்தித்து, நொந்து போயிருக்கிற எமது மக்களை அவர்களது மனங் கோணாதபடி நடத்த வேண்டும். செய்ய முடியாத அலுவல்களானாலும், அதையும் பக்குவமாக எடுத்துச் சொல்லி அனுப்ப வேண்டும் என யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

தென்மராட்சி பிரதேச செயலகப் புதிய கட்டடத்தில் இடம் பெற்றசாந்தி நிகழ்வுகளில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் -

யுத்தத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட தென்மராட்சியை மீளக் கட்டியெழுப்பவும், சாவகச்சேரி நகரை நவீன மயப்படுத்தவும் திட்டங்கள் தீட்டப்பட்டு, கலந்துரையாடப்பட்டும் வருகின்றது. இவை விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வுகளில் பிரம்மஸ்ரீ சோ.மதுசூதனக்குருக்கள், அருட்தந்தை வசந்தகுமார் அடிகளார் ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

யாழ்.மாவட்டத்திட்டப் பணிப்பாளர், கட்டடத் திணைக்களப் பொறியியலாளர் ஆகியோரும் உரையாற்றினர். பிரதேச செயலக அலுவலர்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள், பொது மக்கள் எனப் பலர் இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டனர். (24)

# இளைஞர்களுக்கு சுயதொழில் பயிற்சி

சுதுமலை

சுனாமியால் பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் சேவாலங்கா நிறுவனம் இளைஞர்களுக்குகான தொழிற் பயிற்சிகளை வழங்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

ஜேர்மன் அக்கிறோ அக்சன் எக்கோ நிறுவனங்களின் நிதியுதவியுடன் மேசன் வேலை, தச்சு வேலை, நீர் குழாய் பொருத்துவது போன்ற தொழில்களில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாக இந்த நிறுவனத்தின் சுனாமித் திட்டமுகாமையாளர் க.உஜிதன் தெரிவித்தார்.

பருத்தித்துறை கொட்டடி சுப்பர் மடம் பகுதியைச் சேர்ந்த 70 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் இதில் பயிற்சி பெற்றுவருவதாகதாக தெரிவிக்கப்படுகிறது. (91)

# கலை இலக்கியப் பெருவிழாக்கள் மூலமாவது எமது கலாசார விழுமியங்களைப் பேணுவோம்

## இலக்கிய விழாவில் சிவாஜிலிங்கம் எம்.பி



நெல்லியடி

தனித்துவம் மிக்க பழம்பெருந் தமிழ் மக்களின் கலாசார விழுமியங்களை, மொழிப்பற்று மிக்க கலாசார பேரவைகளுக்கூடாக, இயல், இசை, நாடகங்களை அசைபோட்டு மீட்கும் நடவடிக்கைளைத் தொடர்வதன் மூலம் எமது இனத்துக்கும், மொழிக்கும் அவை விடிவைத் தேடித் தரும் என்பது மறுக்க முடியாத உண்மை என, கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

அண்மையில் வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச கலாசார பேரவை நடத்திய கலை இலக்கியப் பெருவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

அறிவியல் கல்வி மூலம் உலகரங்கில் காணப்படும் வளர்ச்சி எவையாயிருந்தாலும் - அவை ஒரு நாட்டினதோ, மக்களினதோ கலை, கலாசாரப், பண்பாடுகள் அழிவுபடக் காரணமாயிருக்குமாயின் அந்த நாடும், அந்த மக்களும் இருள் சூழ்ந்த வாழ்வையே சந்திக்க நேரிடும்.

அந்நிய நாடுகளின் மோகம் எம் நாட்டு இளைஞரை ஆட்டிப் படைக்கிறது. மொழியையோ, இனத்தையோ, நினைக்கின்ற மனநிலை அருகிக் காணப்படுகிறது. இத்தகைய போக்குக் குறிப்பாக எமது கலாசார விழுமியங்களைச் சிதைத்து, இனத்தையும் மொழியையும் அழிவுக்கு இட்டுச் செல்கிறது.

இத்தகைய இருள்மயமான காலத்துக்க ஒளியூட்டும் பாரிய பொறுப்புகளை எமது பிரதேச செயலகங்களும், சனசமூக நிலையங்களும் மற்றும் பல நிறுவனங்களும், முன்னின்று பொறுப்பேற்று நடத்தும் இத்தகைய கலை இலக்கியப் பெருவிழாக்கள் எமது வருங்காலச் சந்ததியினர் தமது பொறுப்புகளை உணர்ந்து செயல்பட உதவும் அரிய முயற்சியாகும்.

தொன்மை மிக்க எம்பாரம்பரிய கலையம்சங்களும், மொழியின் பெருமையும் குன்றிப் போகின்றதே என்ற அங்கலாய்ப்பை உணர்ந்து, உணர்வு பூர்வமாக உயிரூட்டமாக உருவாக்கப்பட்டு வெளிப்படுத்தப்படும் கலைப் படைப்புகள் சிறந்த ஊடகமாகும்.

அந்த வகையிலே கரவெட்டிப்பிரதேச செயலகம் தொடர்ச்சியாக வருடந்தோறும் எடுத்து வரும் கலாசாரப் பேரவையின் கலை இலக்கியப் பெருவிழாவில் - கலை இலக்கியப் பாரம்பரியத்தைப் புத்தூக்கப்படுத்துவதோடு, மாணவர் மத்தியில் தமிழ் அறிவுத்திறனை விருத்தி செய்ய எடுத்துவரும் முயற்சிகளூடே தமிழரின் இனிமையை நயந்து, வியந்து, சுவைக்க எடுக்கப்பட்ட முயற்சிகளைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இவை காலத்தின் தேவையறிந்து எடுக்கப்பட்ட அரிய முயற்சியாகும்.

பிரதேச செயலரின் இலக்கியப் பெருவிழாவாக எடுக்கப்படும் முயற்சி - பாரம்பரிய கலை, பண்பாடுகளுக்குப் புத்துயிர் அளிப்பதோடு, கரவெட்டிப் பிரதேசத்தின் வளர்ச்சிப் பணிகளிலும் அது சிறந்தோங்கி நிற்கிறது. இந்தப் பிரதேசத்தில் நெல்லியடி நகரம் சகல வசதிகளும் நிறைந்த நகரமாக மிளிர என்னாலான முயற்சிகள் அனைத்தையும் செய்வேன். அத்தகைய வளர்ச்சியின் பின்னணியில் இந்த மண்ணின் பழம் பெரும் கலைகளும், கலைஞர்களும் பாதுகாக்கப்படுவர் எனக் கூறினார். (13)

# பொங்கு தமிழ் நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல்

தென்மராட்சி

தமிழ் மக்களது உரிமைகளைச் சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டுமெனக்கோரி, எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள பொங்குதமிழ் எழுச்சிப் பிரகடன நிகழ்வு சம்பந்தமாகத் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

கடந்த புதன்கிழமை மாலை இடம்பெற்ற இந்த நிகழ்வில்- தென்மராட்சி வெகுஜன ஒன்றியங்களின் தலைவர் அருந்தவபாலன் கலந்துகொண்டு இந்த நிகழ்வின் தேவை பற்றியும், அதில் மக்கள் கலந்துகொள்ள வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தி பிரதேச செயலக அலுவலர்கள், கிராம அலுவலர்கள் மற்றும் சமுர்த்தி அலுவலர்களுக்கு விளக்கமளித்தார். (24)

# வீடுகளை அமைப்பதற்கு பிரதேச செயலகம் நடவடிக்கை

வடமராட்சி

வடமராட்சி வடக்குப் பிரதேசசெயலர் பிரிவில் யுத்தத்தால் அழிந்துபோன, பாதிக்கப்பட்ட வீடுகளை அமைத்துக் கொடுக்க பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள 17 கிராம அலுவலர் பிரிவில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு உலக வங்கியும், அரசசார்பற்ற நிறுவனங்களும் முன்வந்துள்ளன.

இதற்கான நடவடிக்கையில் பருத்தித்துறை பிரதேச செயலகம் இறங்கியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (17)

# கருத்தரங்கு

நெல்லியடி

நெல்லியடிப் பகுதியிலுள்ள உணவகங்கள், தேநீர்ச்சாலைகள், பேக்கரிகளில் வேலைபார்க்கும் ஊழியர்களுக்கான கருத்தரங்கு - நெல்லியடி திரு.இருதய கல்லூரியில் அண்மையில் நெல்லியடி பொதுசுகாதார பரிசோதகர் பா.பாலதேவா தலைமையில் நடைபெற்றது.

இதில் பொது சுகாதார பரி சோதகர் எம்.இரவிச்சந்திரன் கலந்து கொண்டு, தூய்மை பேணுதல் உணவுகள் பரிமாறல் போன்ற விடயங்கள் பற்றி விளக்கமளித்தார். (17)

# கிராமசேவையாளர் வீட்டில் திருட்டு

அளவெட்டி

அளவெட்டி மத்தியிலுள்ள கிராம அலுவலரின் வீட்டில் ஜன்னல் கம்பிகளை வளைத்து உட்புகுந்த திருடர்கள் - ஒரு லட்சம் ரூபா பணமும் மற்றும் நகைகளையும் திருடிச்சென்றுள்ளனர்.

சம்பவதினம் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்துக்குச் சென்று இரண்டு மணித்தியாலத்தின் பின், வீடு திரும்புவதற்கிடையில் இந்தச் சம்பவம் இடம் பெற்றதாகக் கிராம அலுவலர் தெரிவித்தார்.

இது குறித்து தெல்லிப்பளை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (72)





தமிழீழ தேசிய அரசை சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டும் எனக் கோரி யாழ்.பல்கலைக்கழக சமூகத்தால் மேற்கொள்ளப்படவுள்ள பொங்குதமிழ் எழுச்சிப் பிரகடன ஆயத்த நிகழ்வில் பெண்கள் பண்பாட்டு மையத்தினர் பாடல் இசைப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரின் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.


## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

உகவை ஐந்து



பெயர் : ந.அபிராமி
முகவரி : கிளிநொச்சி

உகவை ஒன்பது



பெயர் : உ.நித்தியா
முகவரி : மீசாலை.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு :

கூப்பன்களும் புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்





# செல்வம்

சிறுகதை

செ.யோகநாதன்

ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகளின் பின் சுகுமாரன் சொந்த ஊருக்கு வந்திருந்தான். இவ்வளவு காலமும் லண்டனிலேயே அவன் வாழ்ந்தான். இப்போதும் அவன் லண்டனின் குடியுரிமை பெற்றவன்தான். இடைப்பட்ட காலத்தில் ஒரு போதும் அவன் தான் பிறந்த பூமிக்கு வந்ததில்லை. இந்த இடைக்காலத்தில் அவனுடைய தகப்பனார் இறந்து போய்விட்டார். தாயும் நான்கு சகோதரிகளும் மட்டும் தான் செல்வச் செழிப்புடன் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

சுகுமாரைக் கண்டதும் கண்ணனின் மனம் அவனையறியாமலே



வெறுப்பும், எரிச்சலும் கொண்டது. கண்ணனும், சுகுமாரனும் இளவயதிலே நெருக்கமான நண்பர்களாக இருந்தவர்கள். அவர்கள் இருவரையும் ஒட்டிப் பிறவாத இரட்டையர்கள் என்று பள்ளிக் கூடத்தில் சொல்லிக்கொள்வார்கள்.

புத்தம் புதிய காரிலிருந்து ஆடம்பரமான கோலத்தில் இறங்கிய சுகுமாரைக் கண்டதும், கண்ணன் பின் பக்கமாகத் திரும்பிக் கொண்டான். அவனைப் பாராமலே விறுவிறு வென்று நடக்கத் தொடங்கினான்.

☆☆☆

இந்திய அமைதிப்படை சமாதான நிலையை ஏற்படுத்துவதாகக் கூறிக் கொண்டு யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த காலம் அது. அச்சமும், கொடூரமும் யாழ்ப்பாண மக்களை வலை போல மூடியிருந்த காலமது. தினசரி அங்குமிங்குமாகத் துப்பாக்கிச் சத்தமும், கதறல் குரல்களும் வெகு சாதாரணமான நிகழ்வாய் இருந்தது. தமது வீட்டினுள்ளே இருப்பதற்கே மக்கள் மிகவும் அஞ்சி நடுங்கினார்கள். இந்திய அமைதிப்படை மக்களை எந்தக் காரணமும் இல்லாமல் இழுத்துச் சென்றது. விசாரணை என்ற பெயரில் சித்திரவதைகளைச் செய்தது. வீட்டிலிருந்து இழுத்துச் சென்றவர்களை உடலெல்லாம் காயங்களோடு உயிரற்ற சடலங்களை அவர்களின் வீட்டு வாசலில் கொண்டு வந்து போட்டுவிட்டுச் சென்றது. ஏதாவது கேட்டால் உங்களுக்கும் இந்தக் கதிதான் என்று சொல்வது போல, துப்பாக்கியை வெடிக்க வைத்துவிட்டு அவர்கள் சென்றனர். அவர்களின் எல்லாச் செயல்களுக்கும் ஆட்காட்டிகள் துணையாக நின்றனர். இதனால் மக்கள் தங்களோடு கூடப் பேசுவதற்குப் பயந்து வாழ்ந்தனர். சுகுமாரின் அப்பா ஒரு பள்ளிக் கூடத்தில் தலைமை ஆசிரியராக இருந்தவர். அவருக்கு ஐந்து பிள்ளைகள். மூத்தவள் ஒரு பெண், பெயர் ஜானகி. அடுத்தது ராஜகுமாரி. மூன்றாவது பையன் சுகுமாரன். சுகுமாரனுக்கு அடுத்ததாக தேவகி, மனோகரி என்ற சகோதரிகள்.

தகப்பனின் உற்சாகத்தால் இவர்கள் எல்லோரும் கல்வியில் முன்னணியில் இருந்தனர். மற்றவர்களோடு அன்பாகவும், மரியாதையாகவும் பழகும் இயல்பு இவர்களுடையது. தாயார் சிவபாக்கியம் தன்னுடைய பிள்ளைகளைச் சிறந்த முறையிலே வளர்த்து வந்தார்.

பாடசாலை ஆசிரியரான கருணாகரன் எவரோடும் நேசமாகவே நடந்து கொள்வார். இதனால் அவரின் குடும்பத்தின் மீது எல்லோரும் மிகவும் மரியாதை வைத்திருந்தனர். கருணாகரனது வீட்டிலேயே ஒருவனைப் போல் இருந்தவன் 'செல்வம்'.

அம்மா அப்பாவை சிறுவயதி லேயே இழந்துவிட்ட செல்வம், நான்கு ஆண்டுகளாக கருணாகரனுடனேயே இருந்து வருகிறான். அந்த வீட்டு வேலைகள் யாவற்றையும் செல்வமே செய்து வந்தான். எப்போது பார்த்தாலும் சுறுசுறுப்பான வண்ணத்துப் பூச்சிபோல வீட்டுப் பணிகளிலேயே அவன் ஈடுபட்டிருப்பான். உற்சாகமும், ஆர்வமும் ததும்பும் முகத்தில் எந்த வேளையிலும் யாரும் சோர்வினைக் கண்டதில்லை.

ஒரு நாள் கருணாகரன் தனது ஆசிரியர் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்த போது, 'செல்வம்' அடிக்கடி அங்கே சுறுசுறுப்போடு வந்து போனான்.

புன்னகையோடு அவர்களைப் பார்த்துவிட்டு, குளிர்ந்த நீரைக் கொண்டு வந்து வைத்தான். கருணாகரனின் நண்பரான அந்த ஆசிரியர் அவனையே கூர்ந்து கவனித்தார். வந்த விசயம் முடிந்த வேளையில் கருணாகரனிடம் அந்த ஆசிரியர் செல்வத்தைப் பற்றி விசாரித்தார்.

''மகாகவி பாரதியார்'' கண்ணனை நண்பனாகப் பாவித்துப் பாடிய பாடல் தான் எனக்கு ஞாபகம் வருகிறது.

"எங்கிருந்தோ வந்தான் இடைச்சாதி நானென்றான்
இங்கிவனை யான் பெறவே என்ன தவம் செய்துவிட்டேன்"

என்று பாரதி கண்ணனைப் பற்றிச் சொன்னார். செல்வத்தைப் பற்றிக் கூட நான் அப்படித்தான் சொல்ல வேண்டும்.

சொல்லிக் கொண்டு இருக்கும் போதே கருணாகரனின் குரல் அவரையறியாமலே தளதளத்தது.

அந்த வேளையில் அங்கே வந்த செல்வம் இருவரையும் புன்னகை யோடு பார்த்துவிட்டு உள்ளே சென்றான். அதே வேளையில் வெளியே கேட்ட கடூரமான வாகன இரைச்சல், அந்த வீட்டினுள் சூறைக்காற்றுப் போல வீசி மறைந்தது. அந்த ஓசை மங்கலாக ஒலித்தபோது, சடசடவென துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டது. கருணாகரன் முகத்திலே தயக்கம் மேலிட, தனது நண்பரைப் பார்த்து "போவதில் ஒரு பயமும் இல்லை தானே" என்றார். நண்பர் தன்னையறியாத விரக்தியோடு கருணாகரனை நோக்கினார். பிறகு எதையோ யோசித்துக் கொண்டு வேதனை நிரம்பிய குரலில் சொன்னார்.

"இப்ப உள்ள சூழ்நிலையில வீட்டுக்குள்ளே இருந்தாலென்ன, வெளியில இருந்தாலென்ன மரணம் விரும்பியபடி வந்து போகிறது. இதற்கெல்லாம் யாரிடம் போய் நீதி கேட்பது".

அவர் கூறிய வார்த்தைகளில் ஒவ்வொரு சொல்லிலும் ஆழமாகப் படிந்திருந்த உண்மையை நினைத்துக் கருணாகரன் பெருமூச் செறிந்தார்.

☆☆☆

ஐந்து மணிக்குப் பிறகு எவரும் வீட்டுக்கு வெளியே நிற்கக் கூடாது என்று கருணாகரன் தனது பிள்ளைகளுக்குக் கட்டுப்பாடு விதித்திருந்தார். அந்த நேரத்துக்குள் வீட்டு வேலைகள் யாவற்றையும் செய்து முடித்துவிட வேண்டுமென்று அவர் செல்வத்துக்கும் உத்தரவிட் டிருந்தார்.

வெள்ளிக்கிழமையன்று பதினொரு மணிபோல இந்திய அமைதிப்படை வாகனங்கள் தனது பள்ளிக்கூடத்தினுள் நுழைந்தபோது, கருணாகரன் பயத்தினால் நடுங்கிப் போய்விட்டார். அவரிடம் எந்த அனுமதியும் பெறாமலே உயர் வகுப்பறைகளில் படைச்சிப்பாய்கள் நுழைந்தனர். அவர்களோடு முகத்தில் கறுப்புநிறத் துணிகளைக் கட்டிய தலையாட்டிகளும் நுழைந்தனர். சிறிது நேரத்தில் பன்னிரண்டு மாணவர்களுடன் அந்தச் சிப்பாய்கள் தலைமை ஆசிரியர் இருந்த இடத்திற்கு வந்தனர்.

கருணாகரனுக்கு உடலெல்லாம் நடுங்கியது. வியர்வையால் தேகமெல்லாம் நனைந்து அவரைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

இராணுவத் தளபதி ஒருவன் கருணாகரனைக் கைதட்டி, தனக்கு அருகாகக் கூப்பிட்டான். கொச்சையான ஆங்கிலத்தில் அவன் கரகரத்த குரலில் சத்தமாகக் கூறினான்.

"ஒரு சிறிய விசாரணைக்காக இவர்களை அழைத்துக் கொண்டு செல்கிறேன். விசாரணை முடிந்த தும் உடனே பத்திரமாகத் திருப்பி அனுப்பிவிடுவேன்."

அவரது பதிலைப் பற்றி எந்த அக்கறையும்கொள்ளாமல் இராணுவத்தளபதி அங்கிருந்து புறப்பட்டார்.

வார்த்தைகளற்று இருந்த கருணாகரன் இப்போது தன்னைச் சுற்றி நின்ற ஆசிரியர்களை வேதனையோடு பார்த்தார். கண்ணீர் பெருகிய கண்களைத் துடைத்தவாறே தலைதலையாக அடித்துக் கொண்டார்.

எல்லாமே கெட்டிக்காரப் பிள்ளைகள். இதுகள் என்ன சித்திரவதைக்கு உள்ளாகப் போகுதோ. கடவுளே! இதையெல்லாம் பார்த் துக்கொண்டு நீ சும்மா இருந்தால் நாங்கள் என்ன செய்யுறது.

அன்றிரவு முழுவதும் கருணாகரன் நித்திரை கொள்ளவே யில்லை. அடிக்கடி எதையோ வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டு, நெற்றியில் அடித்துக் கொண்டார். வேதனை நிறைய ராணுவச் சிப்பாய்கள் அந்தப் பள்ளிக்கூட மாணவர்களை அள்ளிச் சென்றதை அவருடைய மனம் ஓயாமல் நினைத்துக் கொண்டிருந்தது. அந்த மாணவர்கள் என்னென்ன சித்திரவதைக்கு உள்ளாகிறார்களோ என்பதை நினைத்த போது அவரது நெஞ்சினுள் இரத்தம் பீறிட்டது.

பொழுது விடிந்ததும் அந்த மாணவர்களைத் தேடி அவர் ராணுவ முகாமுக்குச் செல்கிறார். அவரைக் கண்ட, வாசலில் நின்ற சிப்பாய்கள் சத்தமிட்டுச் சிரித்தனர். கைகளைச் சத்தமாகத் தட்டிக் கொண்டே கருணாகரனை உள்ளே அழைத்துச் சென்றனர். கருணாகரனுக்கு கோபத்தை அடக்க முடியவில்லை. எனினும் தன்னை சமாளித்துக் கொண்டு அவர் அவர்களை பின்தொடருகின்றார். திடீரென்று அவர்கள் பலத்த சிரிப் புடன் அங்கே பார் பையன்களை என்று சத்தமாகக் கூறுகின்றனர். கருணாகரன் நெஞ்சு பதைக்க அவர்கள் காட்டிய திக்கைப் பார்க்கிறார். அவரால் எதையுமே பேச முடிய வில்லை. தன்னையறியாமலே கதறினார். அவர்கள் காட்டிய திசையிலே மாணவ உடையணிந்த தலையில்லாத முண்டங்கள் சிதறிக் கிடந்தன. கருணாகரன் தன்னை அறியாமலே ஐயோ கடவுளே என்று தலையில் அடித்துக் கொண்டு ஓல மிட்டார்.

'அப்பா அப்பா' கருணாகரனின் அருகே நின்ற அவரது பிள்ளைகள் அவரது கைகளைப் பற்றிக் கொண்டு அவரை நித்திரையில் இருந்து எழ வைத்தனர். அவரது உடல் வியர்த்து நனைந் திருந்தது. ராஜகுமாரி அவரது நெற்றிவியர் வையை பரிவோடு துடைத்து விட்டாள்.

"என்ன கனவப்பா கண்டீர்கள்" ராஜ குமாரி கனிவோடு தகப்பனைப் பார்த்துக் கேட்டபோது அவர் எதையுமே பேசாமல் மௌனமாக இருந்தார். பிறகு தன்னைச் சமாளித்துக் கொண்டு இப்போது நேரமென்ன என்று கேட்டார்.

தப்பனையே கவலையோடு பார்த்துக் கொண்டிருந்த ஜானகி 'நேரம் விடிய ஐந்தரை மணி ஆகிறது அப்பா' என்றார்.

"சரி நீங்க போய் படுங்க" என்று கருணாகரன் மெல்லிய குரலிலே கூறினார்.

☆☆☆

நாட்களாக யாருடனும் எதுவுமே பேசவில்லை. நாலைந்து தட வைகள் இராணுவ முகாமுக்குப் போனவருக்கு எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. அந்த மாணவர் களின் பெற்றோர்களையும் கூட்டிக் கொண்டு அவர் முகாம்களுக்கு சென்றிருந்தார். மாணவர்களின் பெற்றோர்கள் கல்லும் கரையும் விதத்தில் இராணுவத் தளபதிகளைப் பார்த்து கெஞ்சிக் கதறினர். இறுகிப் போயிருந்த பெற்றோர்களை அடியாத குறையாக அங்கிருந்து விரட்டினர். கருணாகரன் பொறுமையை முற்றாக இழந்து போனார். இராணுவத் தளபதியுடன் சத்தம் போட்டு கதைத்தார். அவரது கோபம் சிப்பாய்களுக்கு மிகுந்த எரிச்சலை உண்டாக்கி இருக்க வேண்டும்.

கொச்சைத் தனமான வார்த்தைகளால் அவர்கள் அவரைத் திட்டி விட்டு வெளியே போகும்படி கட்டளை இட்டார்கள்.

மூன்றாவது நாள் காலையில் பள்ளிக் கூட வாசலில் நிறையச் சனங்கள் கூடி நின்றனர். எல்லோரது கண்களிலும் கண்ணீர் நிறைந்திருந்தது. பாடசாலை வாசலில் அங்கிருந்து சிப்பாய்கள் கூட்டிச் சென்ற மாணவர்கள் நெஞ்சினில் துப்பாக்கிச் சூட்டோடு பிணமாகிக் கிடந்தனர்.

கருணாகரன் தலைதலையாக அடித்துக் கொண்டார். கொஞ்ச நேரத்தில் அவர் அங்கேயே மயங்கி விழுந்துவிட்டார்.

சுற்றி நின்றவர்கள் வேதனை யோடு கருணாகரனை மயக்கம் தெளிவித்து, அவரைக் கைத்தாங்கலாகப் பிடித்து வீட்டுக்குக் கூட்டிச் சென்ற போது வழியிலே அவர்களைக் கண்ட சுகுமாரன் கண்ணீர் விட்டு அழுதான்.

☆☆☆

வெயில் நெருப்பாய் தகித்து எரிந்து கொண்டிருந்தது. கருணாகரன் பள்ளிக்கூடத்துக்குச் சென்றிருந்தார். சுகுமாரன் அரசாங்க வர்த்த மானியை பார்க்கச் செல்வதாகவும், தான் வருவதற்குப் பின்னேரமாகும் என்றும் கூறிச் சென்றிருந்தான். செல்வம் சுறுசுறுப்புடன் அங்கு மிங்குமாகச் சென்று வீட்டு வேலைகளைச் செய்து கொண்டிருந்தான். புன்னகை மாறாத அவனுடைய முகத்தில் அவ்வளவு வேலைகள் செய்தும் கொஞ்சமும் களைப்புத் தெரிய வில்லை.

வெளி விறாந்தையில் நின்றதும் தற்செயலாக சுவரைப் பார்த்தான். சென்றவாரம் சுவரில் மாட்டப்பட்ட அந்தப் படம் வீட்டிலிருந்த எல்லோரையும் திகைப்பிலேயே ஆழ்த்தியது. அந்தப் படத்திலிருந்த சுகுமாரன் மேலோட்டமாகப் பார்க்கும்போது செல்வத்தைப் போலவே காணப்பட்டான். தூரப் பார்வைக்கு இருவரும் ஒரே தோற்றம் உடையவர்களாய் இருப்பதை புகைப் படத்தில் தான் தெளிவாகக் காணமுடிந்தது. அந்தப் புகைப் படத்தை அவன் கவனமாகப் பார்த்துக் கொண்டிருக்க ராஜகுமாரி அவனுக்குப் பின்னால் நின்று கொஞ்ச நேரம் கவனித்தாள்.

பிறகு மெல்லிய சிரிப்போடு அவள் அங்கு விரிந்திருந்த மௌனத்தைக் கலைத்தாள்.

"செல்வம்" குரல் வந்த திசையை நோக்கி திரும்பினான்.

"அந்தப் படத்தில் எதைப் பார்த் துக் கொண்டிருக்கிறாய்". கூச்சத் தோடு அவளைப் பார்த்த செல்வம் பிறகு புன்னகையோடு கூறினான்.

"என்னுடைய படத்தைத் தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்".

அப்போது அங்கே வந்த மனோகரி அவன் கூறியதைக் கேட்டதும் முகத்தில் புன்னகை யோடு ராஜகுமாரியைப் பார்த்தாள்.

இந்த வேளையில் ஜானகி அவசர அவசரமாக அங்கே ஓடி வந்தாள். முகத்தில் பரபரப்பு நிறைந்திருந்தது. வார்த்தைகள் அச்சத்தில் தடுமாறின.

"ஆமி றக் ஒன்று எங்களுடைய வீட்டுப் பக்க

மாக வந்து கொண்டிருக்கிறது." கடவுளே என்ன நடக்கப் போகுதோ தெரியவில்லை.

"அது ஒன்றும் நடக்காது நீங்கள் பயப்பட வேண்டாம். நான் நிற்கிறன் தானே"

உறுதியான குரலில் சொன்னான் செல்வம்.

அப்போது அங்கே காந்தன் வேகமாக உள்ளே வந்தான். அவனது முகம் முழுவதும் வியர்வை பொங்கி இருந்தது. உடம்பெல்லாம் நடுங்க பரபரப்போடு அவன் சொன்னான்.

"ஆமிக்காரர் சுகுமாரனைத் தான் தேடிக் கொண்டு வருகின்றனர். சுகுமாரன் இங்கே இருந்தால் எங்கையாவது தப்பி ஓடச் சொல்லுங்கள். சொல்லிவிட்டு அங்கிருந்து மின்னல் போல மறைந்தான் காந்தன்.

திகைத்துப் போய் நின்ற ராஜகுமாரி சட்டென்று செல்வத்தின் கைகளைப் பற்றிக் கொண்டாள். பிறகு கண்ணீர் சுரக்கும் தன் கண்களை அவனது கைகளில் பதிய வைத்தவாறு விம்மினாள்.

செல்வம் எதையும் விளங்கிக் கொள்ளாமல் திகைத்துப் போய் நின்றான். அவனுக்கு வார்த்தைகள் வரவில்லை. பிறகு தன்னைச் சமாளித்துக் கொண்டு "என்ன சொல்லுங்க நான் எதென்றாலும் செய்வன்" என்றான்.

ராஜகுமாரி மெல்லத்தலையை நிமிர்ந்தாள். "செல்வம், சுகுமாரைத் தேடி ஆமிக்காரன் இங்கே வந்தால் அவன் இல்லையென்று சொன்னாலும் அவங்கள் நம்பமாட்டாங்கள். வீடெல்லாத்தையும் தலைகீழாக்கி போடுவாங்கள். சுகுமாரனை தேவையில்லாமல் தான் இவங்கள் தேடி வாறாங்கள். தேடி வந்த போது பேசாமல் போய்விட்டால் அவங்கள் விசாரித்துப் போட்டு விட்டு விடுவாங்கள். பிறகு ஒருத்தருக்கும் எந்தப் பிரச்சினையும் இல்லை."

மனோகரியும், ஜானகியும் ராஜகுமாரியை ஆச்சரியத்தோடு பார்த்தார்கள்.

"ஆனபடியால் ஆமிக்காரர் இங்கே சுகுமாரை பற்றி விசாரிக்க வந்தால், நீர் நான் தான் சுகுமாரன் என்று உறுதியாக சொல்ல வேணும். அப்படிச் சொன்னீர் என்றால் அவர்கள் உம்மைத் தான் கூட்டிச் செல்வார்கள். நாங்கள் எப்படியும் உம்மை ஒரு நாளில் வெளியால கொண்டு வந்திடுவம்."

சுகுமாரை ஆமி பிடித்துக் கொண்டு போனதைக் கேட்டால் உடனேயே அம்மாவுக்கு ஹார்ட் அட்ராக் வந்துவிடும். பிறகு என்ன நடக்குமென்று உமக்குத் தெரியும் தானே.

ராஜகுமாரி கண்களைத்துடைத்துக் கொண்டே அவனைப் பார்த்துக் கைகளைக் கூப்பினாள்.

செல்வம் முகத்தில் எந்தவித மாற்றமும் இல்லாமல் வெகு இயல்பாகச் சொன்னான்.

"நீங்கள் ஒருத்தரும் இனி எதையும் சொல்ல வேண்டாம். அம்மாவுக்காக நீங்க சொன்னதின் படியே நான் நடக்கிறேன்".

செல்வம் சொல்லி முடிப்பதற் கிடையில் வாசல் பக்கத்திலிருந்து சப்பாத்துச் சத்தங்கள் கேட்டன.

ஏராளம் சிப்பாய்கள் திடுதிடு வென வீட்டுக்குள் நுழைந்தனர். சொச்சைத் தமிழிலே 'இங்கே சுகுமாரன் யாரு இன்குவாறி பண்ண எங்களோடு வரணும்.'

செல்வம் திகைத்துப் போய் நின்ற எல்லோரையும் ஆறுதல் கூறுவது போல மௌனமாகப் பார்த்தான். பிறகு முன்னே நடந்து போய் நான் தான் சுகுமாரன் உங்களோடு வருகிறேன் என்றான்.

திருப்தி நிறைந்த முகத்தோடு சிப்பாய்கள் அவனைச் சுற்றி வந்தனர். பிறகு செல்வத்தை அங்கிருந்து கூட்டிச் சென்றனர்.

மறுநாள் காலையில் இடது கண்ணில் துப்பாக்கிச் சூட்டோடு செல்வத்தின் பிணம் கருணாகரனின் வீட்டு வாசலின் முன் வீசப்பட்டிருந்தது.

★★★

வீதியால் அவசரஅவசரமாகப் போய்க் கொண்டிருந்த கண்ணன் எதிரே வந்த பிரபுவைக் கண்டதும் முகத்தில் புன்னகை துலங்கக் கூறினான்.

"ஐ.பீ.கே.எவ். இங்கே இருக் கேக்குள்ள உம்மைப் பார்த்தது. அவர்கள் இங்கேயிருந்து போயும் கிட்டத்தட்ட பதினைந்து வருசம் ஆச்சு. எவ்வளவு கெட்ட காலமெல்லாம் கழிந்து போயிருக்கு"

கண்ணன் பெருமூச்சு விட்டான்.

"இந்தக் காலத்தில் எவ்வளவு பேர் அநியாயமாகச் செத்துப் போய் விட்டினம். எங்களுக்குப் பழக்கமான பல சிநேகிதர்கள் இப்ப இல்லாதது எவ்வளவு வேதனையாக இருக்கு. மரணம் என்பது மிகச் சாதாரணமான ஒரு விசயமாகப் போய்விட்டுது. ஒருதரை யொருவர் நேசித்ததும் அன்பு காட்டியதும் இப்போது இல்லாமல் போய்விட்ட மாதிரி இருக்குது."

கண்ணன் பிரபுவையே வேதனை ததும்பப் பார்த்தான். அவனுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

மௌனமாய் நிற்கின்ற கண்ணனைப் பார்த்து சலிப்பான குரலிலே சொன்னான்.

"நீர் சொல்றது மெய் தான் எங்களின்ர வீட்டுச் சந்தியிலே ஒரு கார் அக்சிடென்ட். இப்ப தான் நடந்தது. எத்தனையோ வருசத்துக்குப் பிறகு வெளிநாட்டில் இருந்து வந்த ஒருவர் அங்கேயிருந்து கொண்டு வந்த காரிலே ஓடினவர். கார் பெரிய லொறி ஒன்றோடு மோதி அந்த இடத்திலேயே ஆள் செத்துப் போய்விட்டான்."

தன்னையறியாமலே திடுக்கிட் டுப்போய் விட்டார் கண்ணன். அந்த ஆளுக்கு என்ன பெயர் தெரியுமா? "தெரியும் சுகுமாரன் என்று பேசிக் கொள்கிறார்கள்" கண்ணனால் எதுவுமே பேச முடியவில்லை. மனதினுள் வெறுமை பொங்க தன்னுடைய உள்ளங்கையைப் பார்த் துக்கொண்டிருந்தான். மனதினுள் இப்போது செல்வத்தின் கனிவான குரல் அவனுக்குக் கேட்டது.★★★

# நூல் அகம்

**நூல்: உண்மை நிகழ்வுகள்**
**நூலாசிரியர்: பொ.தனுஷா**
**முகவரி: யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**
**வெளியீடு: ஆரம்பக் கல்வி மன்றம்**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**

அண்மையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆரம்பப் பிரிவைச் சேர்ந்த பொ.தனுஷாவின் "உண்மை நிழல்கள்" கவிதை நூல் வெளியீடு கல்லூரியின் பீடாதிபதி திருநாவுக்கரசு கமலநாதனின் தலைமையில் நடைபெற்றது.




சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட தனுஷா - தனது பாடசாலைக் காலங்களில் ஏராளமான கவிதைகள் எழுதியுள்ளார். சாதாரண குடும்பத்தில் பிறந்த தனுஷா - யுத்தம், வறுமை, புலம் பெயர்வு, நட்பு, ஏமாற்றம், போலிகள் என்பவற்றால் தாக்குண்டு தனது அனுபவங்களையும், தனது நண்பர் பட்ட வேதனையையும் தன் மனதினுள் உள்வாங்கி, கண்ணாடி போல் உள்ளதை உள்ளவாறு தனது கவிதை மூலம் காட்டியுள்ளார்.

இந்தக் கவிதைப் புத்தகத்தின் அட்டைப்படம் கூட ஒரு தத்துவத்தை வெளிக்காட்டி, உண்மை நிழல்களுக்கு உரமிட்டிருப்பது அறியக் கூடியதாக உள்ளது. 124 கவிதைகளைச் சுமந்து வருகிறது. நன்றி, இறைவனுக்கு ஓர் கடிதம், கடல் மீன்கள், காதலியே, கருமை, கண்ணீர், விதவை, மரணம், சுனாமி, கல்லறை, வறுமை, நினைவுகள், தாஜ்மகால், நண்பர், ஆயுத மழை... இப்படியான தலைப்புகளில் சொல்லிக்கொண்டு போகிறார் தனுஷா...

இவர் காதல் என்ற கவிதையில்;

"எல்லையில்லா
ஆகாயம் போல்
முடிவில்லாச்
சரித்திர இம்ஷை!" என்று காதலை முடிவில்லாத சரித்திர இம்ஷை என்று கூறுகிறார். இன்னொரு கவிதையில் காதலைப் பற்றி -

"பருவமது
தந்துவிட்ட
நன்கொடை' என்று கூறுகிறார். மேலும் தனுஷா ஆயுத மழை என்ற கவிதையில் -

"கரங்களை உயர்த்தாதே
அடக்குமுறைக்காய்
வரப்போகுது
ஆயுத மழையே!"

என்று காலத்துக்கு ஏற்ற மாதிரியாகக் கூறியுள்ளார். ஒவ்வொரு கவிதைகளும் சிறிதாக இருந்தாலும், ஆழமான பார்வை தனுஷாவில் தெரிகிறது. மேலும் சுனாமி பற்றி "கைகூ" நடையில் -

"அரவணைத்த கைகளால்
சுற்றிச் சென்ற
பாவப் பொறி" என்று கூறுகிறார். மேலும்
சுதந்திரமான
உறக்கத்தின்
பஞ்சணை! என்று கல்லறை என்ற கவிதையில் கூறியுள்ளார். இவ்வாறு பல்வேறு கவிதைகளை வெளிக்காட்டி, தனது கன்னிக் கவிதை நூலின் ஊடாக இதயங்களையும் உரசிப் பார்த்து விட்டார். இவரின் கலைப்பயணம் தொடர வாழ்த்துவோம்.

**-பர்ஹானா குத்தூஸ்- யாழ்ப்பாணம்**

**நூல்:- யா/வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம் (1894 - 2004)**
**110 ஆவது ஆண்டு நிறைவுமலர்**


கடுகு சிறிது காரம் பெரிது என்பது போல - வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம் தனது நூற்றுப்பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி அழகிய கனதியான மலர் ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த வித்தியாலயம் - ஒரு அதிபரையும், ஐந்து பெண் ஆசிரியர்களையும், ஒரு தொண்டர் ஆசிரியர் ஆகியோரைக் கொண்டு இயங்கி வருகின்ற வித்தியாலயமாக இருந்தபோதிலும், தனது நூற்றுப் பத்தாவது ஆண்டினுள் பல கல்விமான்களையும், பல அறிஞர்களையும் உருவாக்கிய ஆரம்ப படிக்கல்லாக அமைந்துள்ளது. அதனால் இந்த வித்தியாலயத்தில் ஆர்வம் கொண்ட, கனடாவில் இயங்கிவரும் வல்வெட்டி நலன்புரி கழகம் என்ற அமைப்பினால் நிதி உதவி அளிக்கப்பட்டு, 155 பக்கங்கள் கொண்ட பெரிய மலராக இந்த 110 ஆவது ஆண்டு நிறைவு விழா மலர் வெளிவந்துள்ளதை நாம் பாராட்டத்தான் வேண்டும்.




மலரில் பகுதி ஒன்று ஆசி முகம் என்ற தலைப்பில் பெரியார்களின் வாழ்த்துச் செய்திகளும், பகுதி இரண்டில் பாடசாலை சமுகம் என்ற தலைப் பில் ஆசிரியர்களும், மாணவர்களும் எழுதிய ஆக்கங்களும், பகுதி மூன்றில் ஆய்வாளர்கள், கல்வியிய லாளர்கள், ஆசிரியர் என்ற தலைப்பில் வடமராட்சிப் பரப்பில் இனம் காணப்பட்ட தொல்லியல் சான்றுகளும், புராதன மையங் களும் என்ற தலைப்பில் பேராசிரியர் செ.கிருஷ்ணராசா எழுதிய நீண்ட கட்டுரையும், படைப்பாளர் குப்பிளான் ஐ.சண்முகத்தின் பிரகடனம் என்ற கவிதையும் மேலும் பல கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. மொத்தத்தில் இந்த அழகிய மலர் பாடசாலைச் சமுகங்களுக்கு முன்மாதிரியாகவும், வாசகர்களுக்குப் பயன்படக் கூடியதாகவும் அமைந்துள்ளமை பாராட்டுதற்குரியது. ✱

## மறந்து போனேனா?



இலைகள் பசுமையைப் போர்த்தியிருக்கும்
அழகு தன்னில்...
கண்கள் லயிக்கும்
கணங்கள் களவாகும்
அலைகள் பசுமை இழக்கும்
தருணம் தன்னில்...
மனது வலிக்கும்
கண்ணீர் வடிக்கும்

சருகாய் அவை பரந்து கிடக்கையில்
வாரிக் குவித்துக் குப்பையாக்கி...
புது மரங்கள் கீழே உரமாய்ப் புதைக்கையில்
மனதுள் நம்பிக்கை முளைக்கும்

இப்போது நல்ல கருமைப் பச்சையாய்
இலைகள் ஜொலிக்கையில்...
சருகானவற்றின் வரலாற்றை
நான் மறந்து போனேனா?
எனக்கே தெரியவில்லை!

-த.அஜந்தகுமார்-

## சிந்தித்துப் பார்க்கிறான்!



துவேசம் பிடித்து
துவம்சம் செய்வோர்
மனித விழுமியம்
விழுங்கிக் கொள்வோர்
சித்தார்த்தனை
சிலையாய் ஆக்கினர்!

சிந்திக்க மறந்த
முரட்டு மூளை
நிந்தனை செய்தது
திரிபீடகத்தை!

இனங்களுக்கிடையே
இணக்கத்தைப் பிரிக்க
புத்தனைக் காளானாய்
முளைக்க விட்டது!

ஆசை துறந்து
அறவழி காட்டிய
வேசம் கலைத்து - பரி
நிர்வாண தத்துவந் தந்த
புத்தனை இங்கே
இனவாதி ஆக்கினர்!

சிலையாய் முளைத்த
சித்தார்த்தன்
இப்போது
சிந்தித்துப் பார்க்கிறான்
வெளிநாடொன்றில்
புகலிடம் தேட...!

- சூரியநிலா
யாழ்ப்பாணம்.

## உங்களுக்காகவே...



விழுதிறக்கிப் படரும்
ஆலமரமாய் - என்
எழுகை நிகழ்த்தப்படும்!
தயார்ப்படுத்தலிலேயே
தடுத்து விடலாமென்றும்
தவறி
தளைத்துவிட்டாலும்
களைந்து விடலாமென்றும்
நினைத்துவிட்டால்
மாற்றிக்கொள்ளுங்கள்
தடுத்துவிட்டால் - என்
வளர்வை
நிறுத்திக் கொள்ளவும்,
களைந்து விட்டால்
முளையாய் மீண்டும்
முளைக்காதிருக்கவும்
நானொன்றும்
சிறுகுருவித் தேன் கூடல்ல!
சுட்டெரிக்கும்
சூரியனுக்கே வெம்மை யுணர்த்தப் போகும்
அக்கினி - அந்த
தென்றலுக்கே சுகமுணர்த்தும்
தெம்மாங்கு!
நாளையென் கவிக்கிளையில்
ஆயிரமாயிரம் பறவைகள்
தண்டிறங்கும் - எழுத்துருவில்
உயிரிணமாயிரம் இரை மீட்கும்
அப்போது - நீங்களும்
மூச்சு விடுவதற்காக
ஒளித் தொகுப்பும் செய்வேன்.

- நெற்கொழுதாசன்
வல்வை.

# கல்விச் செயற்பாடு குறித்து வவுனியாவில் 2 நாள் மாநாடு




வவுனியா

வடக்கு - கிழக்கு மாகாணம் அரசாங்கத்தால் 24 வலயங்களாகப் பிரிக்கப்பட்டு கல்விச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவற்றில் மிகவும் பின்தங்கிய பிரதேசமாக வவுனியா மாவட்டத்தின் வடக்கு கல்வி வலயம் கணிக்கப்பட்டுள்ளது.

இந்த வலயத்தின் கல்வித் தேவைகள், குறைபாடுகள் என்பவற்றை ஆராய்வதற்கான கல்வி மாநாடு இரண்டு நாட்களாக நடைபெற்றது.

வடக்கு கல்வி வலயப் பணிப்பாளர் சிங்காரவேலு தண்டாயுதபாணி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வவுனியா கல்வி வலயத்தின் கல்வித்துறையில் நிலவும் பின்னடைவுகள் குறித்து ஆராய்ந்து, அவற்றுக்கான தீர்வுகளைக் காண்பதற்காகவே இந்த மாநாடு நடத்தப்பட்டது.

இந்தக் கல்வி வலயத்தில் நிலவும் பௌதீக மற்றும் ஆசிரியர் வளம், உபகரணப் பயன்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாகவும், கல்வி அடைவுகள் பெறுபேறுகள் தொடர்பில் அங்கு நிலவும் நிலைமைகள் தொடர்பாகவும் இந்த வலயத்தைச் சேர்ந்த அதிகாரிகள் பத்து தலைப்புக்களில் ஆய்வுக் கட்டுரைகளை இந்த மாநாட்டில் சமர்ப்பித்துள்ளதாக வவுனியா வடக்கு கல்விப் பணிப்பாளர் தண்டாயுதபாணி தெரிவித்தார்.

புதுக்குளம் மகா வித்தியாலய அதிபர் அமிர்தலிங்கம் கருத்துத் தெரிவிக்கையில் -

வவுனியா கல்வி வலயத்தில் உள்ள 89 பாடசாலைகளின் அதிபர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். அதிபர்களுக்கு வழங்கப்படவேண்டிய பயிற்சிகள் மற்றும் தொழிற்துறை சார்ந்த உயர்கல்வி வாய்ப்புகள் என்பவற்றைப் பெறமுடியாத நிலையில் இந்தப் பிரதேசத்தில் அரசியல் பொருளாதார பாதுகாப்புச் சூழல் நிலவிவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வவுனியா கல்வியியல் கல்லூரி பீடாதிபதி கே.பேனாட் கருத்துத் தெரிவிக்கையில் -

இந்தப் பிரதேசத்தில் இடைநிலைப் பாடசாலைகளிலிருந்து விலகும் மாணவர்களின் தொகை இந்தக் கல்வி வலயத்தில் அதிகமாக இருப்பதாகவும், இவ்வாறு விலகிச் செல்லும் மாணவர்களுக்கான தொழிற்கல்விக்கான வாய்ப்புகள் இல்லாத காரணத்தால் சமுகத்தில் பல பிரச்சினைகள் உருவாகியுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

சமூகத்தில் இன்று காணப்படுகின்ற பல பிரச்சினைகளுக்குத் தொழில்வாய்ப்பின்மையே காரணமாக உள்ளது எனத் தெரிவித்த அவர் - இந்த விடயங்கள் குறித்து இந்த மாநாட்டில் விரிவாக ஆராயப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இதுபோன்ற கல்வி மாநாடுகள் வலயம்தோறும் நடத்தப்பட்டு கல்வி மேம்பாட்டுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டியது அவசியம் என இந்த மாநாட்டில் கலந்துகொண்ட வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

அடுத்த ஆண்டில் ஆங்கிலக் கல்வி கட்டாயபாடமாக்கப்படவுள்ள நிலையில் -வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் 95 வீதமான ஆங்கில ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவும் காரணத்தால், ஆங்கிலப்பாடத்தில் சித்தியடையும் மாணவர்களின் எண்ணிக்கை 2 வீதத்துக்கும் குறைவாக இருப்பதாகவும், இது ஆங்கிலப்பாடத்தில் சித்திபெறாத மாணவர்கள் பெரும் எண்ணிக்கையானவர்கள் உயர் கல்வி வாய்ப்பை இழக்கக்கூடிய ஆபத்தான நிலைக்கு இட்டுச் செல்லும் என்றும், வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் ஆலோசகராகிய எஸ்.நவரட்ணராஜா எச்சரிக்கை செய்தார்.

பாடசாலைகள் சமுகத்துடன் பின்னிப்பிணைந்து செயற்படுவதன் மூலமே உண்மையான கல்வி அபிவிருத்தியைக் காணமுடியும் என்பதை வலியுறுத்துவதாக இந்த கல்வி மாநாடு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## மாநாட்டில் கலந்துகொண்டோருக்கு ஏற்பாட்டாளர்கள் நன்றி தெரிவிப்பு!

பரந்தன்

முல்லைத்தீவில் நடைபெற்ற தேசிய எழுச்சி மாநாட்டில் கலந்துகொண்ட அனைவருக்கும் பரந்தன் தேசிய எழுச்சிப் பேரவையினர் - நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கின்றனர்.

முல்லைத்தீவில் நடைபெற்ற பேரெழுச்சிக்கு ஒரு லட்சத்துக்கு மேலான மக்கள் கலந்துகொண்டு வரலாறு படைத்துள்ளனர். எமது ஒருமித்த குரலை சர்வதேசத்துக்கும், இலங்கை அரசுக்கும் நாம் ஒரு கொடியின் கீழ் நிற்கிறோம் எனவும், எமது தலைவிதியை நாமே நிர்ணயித்து இறைமையுடனும், தன்னாட்சியுடனும் தனியாகப் பிரிந்து தனியரசை, அமைத்து வாழத் துடிக்கிறோம் என்பதையும் உணர்த்திநின்ற எமது மக்கள் அனைவருக்கும், தேசிய எழுச்சிப் பேரவை ஏற்பாட்டாளர்களுக்கும் நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கல்விச் செயற்பாடு தொடர்பாக பெற்றோருடன் சந்திப்பு!

கிளிநொச்சி

கிளிநொச்சி கல்விப் பணிமனையினரால் கரைச்சி, கண்டாவளை, பளை, பூநகரி ஆகிய வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாடு தொடர்பான பெற்றோருடனான கலந்துரையாடல் நடைபெற்றது.

தேசியம் நோக்கிய கல்விச் சந்திப்பு - கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் அதிபர் சந்திரராசா தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்துவது, கல்வியால் மாணவர் அடையும் பயன், மாணவர்களுக்கு பெற்றோர் ஒத்துழைப்பும், ஒத்தாசையும் எவ்வாறு புரியவேண்டும் என்பதைப் பற்றி ஆராயப்பட்டது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் குருகுலராசா, உதவிக் கல்விப் பணிப்பாளர் மாக்கண்டு, அபிவிருத்தி பிரிவுக் கல்விப் பணிப்பாளர் முருகவேல், வட்டக்கச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ராமஜெயம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## மீளக்குடியமர்ந்த முஸ்லிம் மக்களுக்கு நிரந்தர வீடு அமைப்பதற்கான கொடுப்பனவு

மன்னார்

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களில் 321 குடும்பங்கள் மன்னார் முசலியில் மீளக்குடியமர்ந்துள்ளன.

இந்தக் குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக்கொடுப்பதற்காக ஒரு குடும்பத்துக்குத் தலா 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாக - வன்னி அபிவிருத்தி அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

புத்தளம் இபுனு பதுதா மண்டபத்தில் வன்னி புனர்வாழ்வு அமைச்சும் - முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களமும் இணைந்து நடத்திய யுவதிகளுக்கான சுயதொழில் பயிற்சிகளின் நிறைவில் பங்குகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் -

மீளக்குடியர்ந்த மக்களுக்கு முதற்கட்டக் கொடுப்பனவாக தலா 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாகவும் -

இந்தக் கொடுப்பனவு வழங்கப்படாதவர்களுக்கு நாளைய தினம் அவை வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மீளக்குடியமர்த்த நடவடிக்கை!

வவுனியா

வவுனியா -சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் இடம்பெயர்ந்து வாழ்ந்துவரும் 215 குடும்பங்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கையால் இந்தக் குடும்பங்கள் இடம்பெயர்ந்து சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் வாழ்ந்து வருகின்றன.

நலன்புரி நிலையம் உள்ள பிரதேசத்தில் 67 ஏக்கர் நிலப்பரப்பில் அடிப்படை வசதிகள் செய்துகொடுக்கப்பட்டு இந்தக் குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்படவுள்ளதாகவும் - இந்த நடவடிக்கை அடுத்த ஆண்டு பூர்த்திசெய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## காலச் சுவட்டில்...

**செப்ரெம்பர் - 19** | **இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை**

1888: முதன் முதலாக அழகிகள் போட்டி - பெல்ஜியத்தில் நடைபெற்றது. 350 அழகிகள் இதில் கலந்துகொண்டனர்.

1893: பெண்களுக்கு வாக்குரிமை வழங்கும் தேர்தல் சீர்திருத்தச் சட்டத்துக்கு ஆளுநர் அனுமதியளித்ததன் மூலம், முதன் முதலாக பெண்களுக்கு வாக்குரிமை வழங்கிய நாடு என்ற பெருமையை நியூசிலாந்து தட்டிக்கொண்டது.

1918: ஜேர்மனியின் சமாதானக் கோரிக்கைகளை பெல்ஜியம் நிராகரித்தது.

1933: சீனாவில் பெரு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. 2000 இற்கும் மேற்பட்ட கிராமங்கள் நீரில் அள்ளுண்டு போயின.

1939: பிரிட்டிஷ் விமானப் படையினர் ஜேர்மனி மீது பிரசாரத் துண்டுப்பிரசுரங்களை வீசின.

1944: ரஷ்யா - பின்லாந்து போர்நிறுத்த உடன்பாடு கையெழுத்திடப்பட்டது.

1945: பிரிட்டிஷ் அரசு இந்தியாவுக்கு சுதந்திரம் அளிப்பதாக வாக்குறுதியளித்தது.

1950: பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் நியூயோர்க்கில் ஒன்றுகூடி, மேற்கு ஜேர்மனியின் மீதுள்ள இராணுவ பொருளாதார சட்டக் கட்டுப் பாடுகளை நீக்கி, அதனைச் சுதந்திர நாடாக்குவது என்று உடன்படிக்கை செய்துகொண்டனர்.

1955: ஆர்ஜென்ரீனாவில் இராணுவப் புரட்சி ஏற்பட்டது. சர்வாதிகாரியும், ஜனாதிபதியுமான யூவான் பெரான் பதவியில் இருந்து தூக்கியெறியப்பட்டார்.

1958: அல்ஜீரிய தேசிய விடுதலை முன்னணி - அல்ஜீரிய குடியரசின் இடைக்கால அரசை நிறுவியது.

1960: இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே சிந்துநதி நீர்ப்பங்கீடு பற்றிய உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது.

1968: நிழற்படப் பிரதி இயந்திரத்தைக் கண்டுபிடித்த அமெரிக்கரான செஸ்டர் கார்ல்சன் மரணமடைந்தார்.

1970: பலஸ்தீன விடுதலை முன்னணிக்கு உதவ, சிரிய இராணுவம் ஜோர்தானுக்குள் நுழைந்தது.

1985: மெக்ஸிக்கோ நகரில் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் 20,000 இற்கும் மேற்பட்டோர் இறந்தனர்.

1988: இஸ்ரேல் முதன்முதலாக ஹொரைஸான் - 1 என்ற செயற்கைக் கோளை விண்ணில் செலுத்தியது.

1989: நைகர் அருகே பிரான்சின் விமானம் ஒன்று நடுவானில் வெடித்துச் சிதறியது. அதில் பயணம் செய்த 171 பேரும் இறந்தனர்.

தொகுப்பு - சந்துரு

### முல்லைத்தீவு மாவட்டத்தில்

## சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவருக்கு புலம்பெயர்ந்தோரால் வலைகள் வழங்கல்

முல்லைத்தீவு

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் - மலேசிய புலம்பெயர்வாழ் மக்களின் நிதிப் பங்களிப்புடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவ குடும்பங்களுக்கு வலைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 3 மணியளவில் முல்லைத்தீவு மீனவர் சங்கச் சமாசத்தலைவர் மரியராசா ஊடாக வழங்கப்பட்டது.

சுனாமியால் தமது அன்றாடத் தொழில் வாய்ப்புகளை இழந்த நிலையிலிருக்கும் மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தொடர்ந்தும் பல்வேறு வழிகளிலும் உதவிகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சைக்கிள்கள் வழங்கல்!

வவுனியா

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் முன்பள்ளிகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்குதமிழர் புனர்வாழ்வுக் கழகம் சைக்கிள்களை வழங்கியுள்ளது.

இது குறித்த உத்தியோக வைபவம் வவுனியா விபுலானந்த வித்தியாலயத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முன்பள்ளிப் பணிப்பாளர், முன்பள்ளிப் பொறுப்பாளர் பாண்டியன் தலைமையில் நடைபெற்றது.

இதில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவநாதன் கிஷோர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

திருகோணமலை, அம்பாறை சிங்கள பகுதி, அம்பாறை தமிழ்பகுதி, மட்டக்களப்பு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு 22 சைக்கிள்களை வழங்க இந்த நிறுவனம் முன்வந்துள்ளது.

## கிளிநொச்சியில் எழுச்சி மாநாடு!

கிளிநொச்சி

தமிழ்த் தேசியப் போருக்கான எழுச்சி மாநாடு - நாளை கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர்கள், மக்கள் அமைப்புக்ளின் பேராளர்கள், மாவட்ட பிரதிநிதிகள் அனைவரையும் இந்த எழுச்சி மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நமது ஈழநாடு

**வைர வரிகள்**

நீ வெற்றியின் ஏணியில் ஏறும்போது, ஏணி சரியான சுவரின்மேல் சாய்ந்திருக்கிறதா என்று உறுதி செய்துகொள்.

## நமது நோக்கு

# அடாவழித்தனக் குழுக்கள் மீதான கடும் நடவடிக்கை அவசியமானதே...!

யாழ். குடாநாட்டில் அண்மைக்காலங்களில் மிக அதிகரித்தளவில் நடைபெற்றுவரும் கோஷ்டி மோதல்கள், குழு அராஜகங்கள், கலாசார சீரழிவு நடவடிக்கைகள், மற்றும் சமூக ஒழுங்கீனங்கள் போன்றவற்றால் குடாநாட்டின் அமைதி, கலாசார செழுமை, பண்பாட்டியல்புகள் அனைத்திற்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதுடன், மக்களின் இயல்புவாழ்வுக்கு மிக மோசமான இடையூறும் அச்சமூட்டும் வகையில் உருவாகியுள்ளது.

இது தொடர்பாக இதற்கு முன்னரும் இதேபகுதியில் பல தடவைகள் நாம் எழுதியிருந்தோம். ஆனாலும் கூட, இது குறித்து சமூகப்பொறுப்புடன் சிந்தித்து உரிய நடவடிக்கைகளை எடுக்கும் பொறுப்புடையவர்கள் அக்கறை எடுக்காததாலோ, அல்லது நிதானம் காட்டியதாலோ என்னவோ குடாநாட்டில் அடாவடித்தனம் புரியும் கும்பல்களின் ஆட்சியானது எல்லை மீறிய அளவிற்கு போய்விட்ட நிலையில், இவற்றைக் கட்டுப்படுத்த சட்டம் - ஒழுங்கை பாதுகாப்போர் என்றிருப்பவர்கள் எத்தகைய துரிதமான இறுக்கமான நடவடிக்கையையும் எடுக்காததால் குடாநாட்டு மக்கள் விடுதலைப்புலிகளிடம் தமது குறையை தெரிவிக்க முயன்றுள்ளார்கள்.

1995 இடப்பெயர்வுக்கு முன்னர், குடாநாடு விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த காலத்தில், எந்தக் குழுவும் கிடையாது எந்தக் கும்பலும் கிடையாது. மின்னொளியற்ற இருள் வேளையிலும்கூட எவரும் எந்த அச்சமுமின்றி தன்னந்தனியாகச் செல்லும் பாதுகாப்பான சூழலுக்கு உத்தரவதாம் இருந்தது.

மனிதனுக்கு மனிதன் பாதுகாப்பு வழங்கும் இயல்பான வாழ்க்கை நிலவியது.

போர் குறித்த அழுத்தமும், அச்சமும் இருந்த போதிலும், வாழ்வு குறித்த நம்பிக்கையும் வாழ்வோம் என்ற உறுதியும் இருந்தது.

ரௌடித்தனம் புரிவோர், ஆயுதம் தாங்கி மக்களை அச்சுறுத்துவோர், சமூக விரோதிகள், தெருச்சண்டியர்கள் என எவரையும் அப்போது காணமுடியாத நிலையே இருந்தது.

ஆனால், இன்று யாழ். குடாநாடு 1995க்கும் 2002க்கும் இடையிலான ஏழாண்டு காலப்பகுதிக்குள் எப்படியெல்லாம் மாறிவிட்டது.

பாதுகாப்புப் படையினர் என்ற பெயரிலான இராணுவத்தினரின் ஆக்கிரமிப்புக்களால் யாழ். குடாநாடு தனது இயல்பையே இழந்துவிட்டது.

யாழ்ப்பாணம் தனது பண்பாட்டு விழுமியங்களுடன் கூடிய கலாசார பெருமைகளை, பாரம்பரிய மான்மியத்தை தொலைத்த நிலை ஏற்பட்டமைக்கு காரணம்தான் என்ன?

ஒரு மாபெரும் விடுதலைப்போரில் தம்மை அர்ப்பணித்து ஆயிரமாயிரமாய் போராட அணிதிரண்ட இளைஞர்கள் அவதரித்த இந்த மணணில் அராஜகக் குழுக்களாக இளைஞர்கள் மாற எது உந்து சக்தியாக விளங்கியது.

இந்த நாசகாரப் பாதையில் இவர்கள் சுயசிந்தனையற்று, மனித இயல்பை தொலைத்து விட்டுத் தொடர இவர்களை வழிகாட்டிய சூழல்தான் என்ன?

அடிதடி சம்பவங்களில் ஈடுபடவும், கொலை முயற்சிகளை மேற்கொள்ளவும், மக்கள் வாழ்விடங்களை, குடிசைகளை தாக்கவும் எரிக்கவும், வீதிகளில் போதைப் பொருட்களை உள்வாங்கி சுயமிழந்த நிலையில், ஆபாசமான, கீழ்த்தரமான பாஷைகளைப் பேசவும், பெண்களையும் முதியவர்களையும் கேவலப்படுத்தி அவமதிக்கவும் இவர்களுக்கு கற்பித்த சமூக சூழல்தான் என்ன?

12 வயதில் புகைக்கவும், 16 வயதில் குடிக்கவும், 17 வயதில் பெண்களுடன் சேஷ்டை செய்யவும், வெறும் ஏழாண்டு காலத்திற்குள் இவர்களை மாற்றிய சக்திதான் எது?

மிகச்சிறிய வயதிற்குள் இத்தகைய உளவியல் கோளாறுகளுக்கு இவர்களைத் தள்ளிய குடும்ப- சமூக - அரசியல் பின்னணி குறித்து ஆழமாக ஆராயவேண்டிய கடமை சமூகப் பொறுப்புடன் சிந்திக்கும் அனைவருக்கும் உண்டு.

கண்டிப்பது, தண்டிப்பது, என்பதற்கு அப்பால் இவர்களுக்கு உளவியல் ரீதியில் சிகிச்சை அளிக்கவேண்டிய அவசியமே இன்றைய காலத்தின் தேவையாகவும் உள்ளது.

கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடவேண்டிய இளைஞர் சமூகம் குற்றச்செயல்களில் நாட்டம் கொள்வது எமது தமிழத் தேசத்துக்கும், தேசியத்துக்கும் மிகமிக ஆபத்தானதாகும்.

தமது சுயம் மீதான அலட்சியம் குடும்பம் மீதான அலட்சியமாக மாறும். குடும்பம் மீதான அலட்சியம் சமூகம் மீதான அலட்சியமாகவும், சமூகம் மீதான அலட்சியம் தேசம் மீதான அலட்சியமாகவும் மாறும். இது ஆபத்தானதும், நாசகார சிந்தனை கொண்டதுமான இளைஞர் சமூகத்தை பல்வேறு வகையிலும் உருவாக்கும் என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

இன்று இத்தகைய கும்பல்களால் ஏற்படும் இடையூறுகளும், அவலங்களும் மக்களால் பொறுத்துக்கொள்ளமுடியாத நிலைக்கு போய்விட்டதையே, இவர்கள் குறித்த விபரங்களை விடுதலைப் புலிகளிடம் வழங்க மக்கள் முனைந்துள்ளமை எடுத்துக்காட்டுகிறது.

போரவலம், இயற்கை அனர்த்த அவலம் என அவலங்களையே சந்தித்து அச்சமும், பீதியும் அடைந்துள்ள எமது மக்களின் இயல்பு வாழ்வுக்கு அச்சுறுத்தலாக இன்றுள்ள சக்திகளின் மோசமானதாக இருக்கும் இந்தக் கலாட்டா கும்பல்களின் சகல நடவடிக்கைகளையும் எந்தவிதமான தாமதமுமின்றி, தயவு தாட்சண்யம் காட்டாது ஒடுக்கப்படவேண்டியது தவிர்க்கவே முடியாத அவசியமாகிவிட்டது.

மக்கள் இதனை யார் செய்வார்கள் என நம்புகிறார்களோ அவர்களிடம் பொறுப்பை கொடுத்திருக்கிறார்கள்.

இந்தப் பொறுப்பை சம்பந்தப்பட்டவர்கள் தட்டிக்கழிக்கவே முடியாது.

சீரழிவுக் கலாசாரத்திலிருந்து விடுதலையடையாமல் தேசத்தில் விடுதலை என்பது முழுமையாகாது...


267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com



மக்கள் அனைவரும் எழுச்சி அடைவார்களாயின் தமிழீழம் உருவாகுவதை எவராலும் தடுக்க முடியாது.

*- தியாக தீபம் லெப்.கேணல் திலீபன்-*

## நாடும் நடப்பும்




**'ஊர்சுற்றி' யார் பார்வையில்...**

# பயங்கரவாதிகள் எனக்கூச்சலிட்டு எப்படிப் பேச்சைத் தொடங்குவது?

பேச்சுவார்த்தை மேசைக்கு புலிகளை வரச்சொல்லும்படி உலகநாடுகள் அழுத்தம் கொடுக்கவேண்டுமென்று சிறிலங்கா அதிபர் சந்திரிகா அம்மையார் உலக நாடுகளைக் கேட்கிறார். பயங்கரவாதத்தை ஒடுக்க ஒன்றுசேரவேண்டுமென்றும் அவர் வேண்டுகோள் விடுக்கிறார். விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று வலியுறுத்திவரும் அதேசமயம், பேச்சுக்கு வரும்படியும் இலங்கை அரசு கேட்கிறது. பேச்சுக்குப் புலிகளை வரச்செய்வதற்கு அழுத்தம் கொடுத்துக்கொண்டு அவர்களைப் பயங்கரவாதிகள் என்றும் சொல்லிக் கொண்டிருந்தால், எப்படிப் பேச்சுக்கு அவர்களைக் கொண்டுவரமுடியும், என்று கேட்டபடியே நண்பர் பரமசிவம் வந்தார்.

முதலில் பேச்சுவார்த்தைக்குப் புலிகளை அழைப்பதாக இருந்தால், பயங்கரவாதிகள் என்று சொல்லுவதை நிறுத்தவேண்டும். பயங்கரவாதிகளைப் பேச்சுக்கு எப்படி அழைத்துப் பேசமுடியும் என்று சொல்கிறீர். நீர் சொல்வது நியாயம். பயங்கரவாதிகள் என்று சொல்லித்தானே அவர்களை உலக நாடுகள் தடைசெய்யவேண்டுமென்று சிறிலங்கா அரசு பிரசாரம் செய்தது. பயங்ரவாதிகள் அல்லர் என்றபடியால்தானே அவர்களுடன் பேசவேண்டுமென்று உலகநாடுகள் தெரிவித்தன. முதலில் ஒரு தலைப்பட்சமாகப் போர்நிறுத்தம் செய்து பேச்சுக்கு வருமாறு விடுதலைப் புலிகள்தானே தெரிவித்தார்கள். இதன்பின்னரும் போர்நிறுத்தம் செய்வதற்கு முதலில் மறுத்தது அரசும், அரச படையினரும்தானே. பின்னர் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் முதலில் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதற்காக இடைக்காலத் தன்னாதிக்க அதிகார சபை வேண்டுமென்றும் புலிகள்தானே கேட்டார்கள். இந்த இடைக்காலத் தன்னாதிக்க அதிகார சபை வழங்கினால் நாடு பிளவுபடும் என்று கூச்சல் போட்டதும் சிங்கள, பௌத்த பேரினவாதிகள்தானே. இடைக்காலத் தன்னாதிக்க அதிகாரசபை அமைத்தாலும் நாடு பிளவுபடும் என்றார்கள். கடற்கோளினால் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களுக்கு வெளிநாடுகள் கொடுத்த உதவிகளைப் பங்கிட்டுக் கொடுப்பதற்கு பொதுக்கட்டமைப்பு அமைப்பதென்றாலும் நாடு பிளவுபடும் என்று கூச்சல் போட்டார்கள். இந்தநிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இயல்பு வாழ்க்கை அமைவதற்கு இடைக்கால நிர்வாக சபையும் இல்லை, கடற்கோளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்குவதும் நாடு பிளவுபடும் என்று எல்லாவற்றிற்கும் தடைபோட்டபோது, இனி எதைப் பற்றிப்பேசி என்ன பயன் என்று புலிகள் கேட்டால், புலிகள் பயங்கரவாதிகள் என்று கூச்சல்போடுகிறார்கள்.

இந்தநிலையில் பேச்சுவார்த்தைக்குச் செல்லும்படி உலக நாடுகள் எப்படிப் புலிகளுக்கு அழுத்தம் கொடுக்க முடியும் என்று நான் கேட்டேன்.

பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்றால், முதலில் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று கூச்சல் போடுவதை நிறுத்த வேண்டும். சிறுவர்களைப் படையில் சேர்க்கிறார்கள், கொலை செய்கிறார்கள் என்று பிரசாரம் செய்வதையும் நிறுத்திப் பேச்சுக்கான சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும். இதுமட்டுமல்ல, கருணாகுழு என்ற பெயரில் விடுதலைப் புலிகளுடன் நிழல் யுத்தம் நடத்துவதற்கு முடிவு கட்டப்படவேண்டும். கருணா குழு என்று சொல்லப்படுபவர்கள் இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியில் செயற்படும் ஆயுதக் குழு என்பது சமீபத்தில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு, அந்தப் பகுதியில் எதிர்பாராதவிதமாக நேர்ந்த சந்திப்பினால் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இது தவிர ஆயுதக் குழுக்கள் சிறிலங்காப் படைகளுக்குத் துணையாக படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் செயற்பட்டுவருவதும், நாடு மட்டுமல்ல உலகறிந்த விடயமுமாகும்.

இந்த நிலையில், விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஆயுதக் குழுக்கள் படைகளின் துணையுடன் செயற்பட்டுக் கொண்டு, புலிகளைப் பயங்கரவாதிகள் என்று பிரசாரம் செய்வதும் பேச்சுவார்த்தைக்குப் புலிகளைப் போகுமாறு உலக நாடுகள் அழுத்தம் கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்துவதும் அர்த்தமற்ற, முரண்பாடான செயல்களாகும் என்று பரமசிவம் சொன்னார்.

பேச்சுவார்த்தை என்பது இதயசுத்தியோடு, இரு தரப்பும் எந்தவிதத் தொல்லைகளுமில்லாமல் அமைதியாக மனந்திறந்து பேசக்கூடிய முறையில் நடைபெற வேண்டும். பயங்கரவாதிகள் என்று சொல்லிக் கொண்டு, பயங்கரவாதச் செயலில் ஈடுபடும் ஆயுதக் குழுக்களுடன் நடமாடிக்கொண்டு பேச்சுவார்த்தை நடைபெறமுடியாது என்று சொன்னபடி பரமசிவம் நடந்தார்.

# எதிர்காலம்?

## வாசகர் நோக்கு

பெண்கள் அன்று அகப்பைதான் பிடித்தார்கள். இன்று ரீவியைத்தான் பிடிக்கிறார்கள். சின்னத்திரை, சினிமாப்படங்கள் கலைநிகழ்வுகள் எனத் தொலைக்காட்சியைத் தஞ்சம் என நம்பியிருக்கின்றனர். இதனால் அவர்களின் பிள்ளைகளும் கெட்டு, எதிர்காலச் சந்ததியின் நல்வாழ்வும் கேள்விக் குறியாகிவிடும். கணவன் களைப்பில் வேலையிலிருந்து வந்து ஒரு தேநீர் கொண்டுவாரும் என்றால், பொறுங்கோ நாடகம் முடியப்போகுது முடியட்டும் வாறன் என்பார்கள். சிறுவர்களை ஏன் படிக்கப் போகவில்லை என்றால் இன்று இலங்கைக்கும் இந்தியாவுக்கும் மச். அத்தோடு ஆசிரியரும் வரமாட்டார் என்பார்கள். இப்படியே போனால் எமது சமுதாயத்தை அதிலிருந்து மீட்டெடுப்பது கஷ்டமாகிவிடும். தொலைக்காட்சி பார்க்கத்தான் வேண்டும். ஆனால் அதுதான் தஞ்சம் என இருக்கக் கூடாது. இன்றைய கால கட்டத்தில் குடும்பப் பிரச்சினைகளுக்கும் விவாகரத்துக்கும் தொலைக்காட்சியும் காரணமாக இருக்கிறது. ஆகவே குடும்பப் பெண்களாக இருந்தாலும் சரி, சிறுவர்களாக இருந்தாலும் சரி குறிப்பிட்ட நேரம் ஒதுக்கிப் பார்ப்பது நன்று. அதிக ஓய்வு என்றால் ஏதாவது கைத்தொழில் வருமானம் சேரும் விடயங்களை அணுகலாம். ஆகவே எமது தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாடு கலாசாரம் என்பவற்றை சினிமாவில் அழித்து விடாதீர்கள் இளம் சமுதாயம் ஒற்றுமையாக, திறமையாக, நல்லொழுக்கம் உடையவர்களாக வளர்த்தெடுக்கும் பாரிய பொறுப்பு உங்களுடையதே. கல்வியில் நாட்டமுடையவர்களாகவும் தமிழ் மண்ணில் பற்றுடையவர்களாகவும் புரிந்துணர்வுடையவர்களாகவும் அவர்கள் வளரவேண்டும்.

வடமராட்சி கிழக்கு — ஆர்.என்.கோபால்

சமுதாயத்தில் பெரும்பாலான சிறுவர்கள் உடல் உள ஆரோக்கியத்துடன் வளர்கிற போதும், சில பிள்ளைகள் சூழல் காரணங்களால் உள ஆரோக்கியம் குறைந்தவர்களாகக் காணப்படலாம். குறிப்பாகப் பிரச்சினைக்குரிய சூழலில் வாழும் பிள்ளைகள் பல்வேறு நெருக்கீடுகளுக்கு முகம் கொடுக்கிற போது உள ஆரோக்கியம் பாதிக்கப்படலாம். இதில் எல்லாப் பிள்ளைகளுமே உளநலப் பிரச்சினைகளுக்கு உள்ளாவதில்லை. இருந்தபோதிலும் சிலர் சாதாரண உதவிகள் தேவைப்பட்டவர்களாகவும், சிலர் விசேட உளநல கவனிப்புத் தேவைப்பட்டவர்களாகவும் இருப்பர். இவர்களை இனங்கண்டு உதவியளிக்க வேண்டியது எமது கடமையாகும்.



# அபிவிருத்தி நிறுவனத்தின் செயற்பாடுகளும் சுனாமி வேலைத்திட்டக் கண்ணோட்டமும்

**இளைஞர், யுவதிகள் எமது சமுதாயத்தில் முக்கியமான அங்கத்தவர்களாகக் காணப்படுகின்றனர். ஒரு சமுதாயத்தின் அபிவிருத்தியில் இவர்களின் பங்கு மிக முக்கியமானது. எமது சூழலைப் பொறுத்த வரை பல்வேறு பிரச்சினைகளின் காரணமாக ஏற்பட்ட இடப்பெயர்வு, உயிர் ,உடமைஇழப்பு, அகதி வாழ்க்கை என்பவற்றால் கல்வியை தொடரமுடியாமை, போதிய தொழிற்கல்வி வசதியின்மை, வேலை வாய்ப்பின்மை, சமூக கலாசார நிகழ்வுகளை இழந்தமை, பொழுது போக்கு அம்சங்கள் இன்மைபோன்றவற்றை அனுபவித்து வருகின்றனர். இத்தகைய சூழ்நிலையில் சுனாமி போன்ற அனர்த்தத்தின் விளைவானது மேலும் இவர்களை நிலைகுலையச் செய்யும். இதனடிப் படையில் எமது சேவை மேற்கொள்ளப்பட்ட பிரதேசத்தில் வாழ்கின்ற இளைஞர், யுவதிகளின் மனநிலையைக் கருத்திற்கொண்டு பல செயற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டது.**

*1994* ஆம் ஆண்டு பல்கலைக்கழக மாணவ ஒன்றியத்தால் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் வழிகாட்டலில் உருவாக்கப்பட்ட ஒரு நிறுவனமே கிராமியப் பொருளாதாரக் கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனமாகும்.

இன்று கிராம மட்டத்தில் பல செயற்திட்டங்களை ஆற்றி வரும் இந்த நிறுவனத்தின் பிரதான நோக்கம் - கிராம மட்டத்தில் மக்களைக் கல்வியிலும், தொழிற்பயிற்சியிலும் தயார்ப்படுத்தலும், வலுப்படுத்தலும் ஆகும்.

இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றன.

* ஒவ்வொரு குழந்தையையும் பாடசாலைக் கல்வியில் இணைத்தல்.

* இளைஞர், யுவதிகளுக்கு தொழிற் பயிற்சிகளை வழங்குதல்.

* இளைஞர், யுவதிகளை கல்வியில் வலுப்படுத்தலும், தயார்ப்படுத்தலும்.

* மாணவர்கள் இழந்த கல்வியை மீளப் பெறுதல்.

* மக்கள் மத்தியில் கல்வி, தொழிற் கல்வி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

* பெற்றார் வீட்டுக் கல்வியை வழங்குதல்.

இத்தகைய செயற்திட்டங்களை இந்த நிறுவனம் சரியான முறையில் நடைமுறைபடுத்தி வருவதால் அதன் நோக்கங்கள் வெற்றிகரமாக எய்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிறுவனத்தின் தற்போதைய செயற்திட்டங்களானது - வடமாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட வருகிறது. எனினும் காலத்தின் தேவைக்கேற்ப செயற்திட்டங்கள் ஏனைய பிரதேசங்களிலும் விஸ்தரிக்கப்படும்.

எமது நிறுவனத்துக்கு நிதி வழங்கும் நிறுவனங்களாக,

1. தமிழர் புனர்வாழ்வுக்கழகம் (TRO)
2. ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம்(Unicef)
3. உலக கனேடிய பல்கலைக்கழக சேவை (Wusc)
4. அபிவிருத்தி நிதியம் - நோர்வே(DF/ODW)
5. சர்வதேசதொழிலாளர் அமைப்பு(ILO)
6. ஆசிய யப்பானிய உறவுப்பாலம்(BAJ)
7. புலம்பெயர்ந்தோருக்கான சர்வதேச நிறுவனம் (IOM)

இந்த அமைப்புக்களினது அனுசரணையுடன் தனது சேவையை வழங்கிக் கொண்டிருந்த கால கட்டத்தில் கடந்த வருடம் டிசெம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி கடல் அனர்த்தம் ஆசிய நாடுகள் பலவற்றின் அமைதியையும், இயல்பு வாழ்க் கையையும் முற்றாகப் பாதித்தது.

இலங்கையிலும் பல பிரதேசங்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டன. அந்தப் பிரதேசத்தில் இந்த நிறுவனத்தின் சேவையின் தேவையை மேலும் உணரவைத்தது. எதிர்பாராத விதமாக ஏற்பட்ட இந்த அனர்த்தத்தின் விளைவாக உயிரிழப்பு, சொத்திழப்பு என்பவற்றுக்கு மேலாக உளரீதியாக மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியது. ஏனைய பாதிப்புகளை விட உளரீதியாக மக்களுக்கு ஏற்படுகின்ற தாக்கமானது அவர்களது உடல்,உள, ஆரோக்கியத்தையும், இயல்பு வாழ்க்கையையும் பாதிப்பதாகவே அமையும். இத்தகைய மாற்றங்கள் சமுதாயத்திலும் பிரதிபலிப்பதைக் காணமுடியும்.

எனவே, இவ்வாறான சந்தர்ப்பத்தில் அவர்களுக்குத் தேவையான ஆதரவினை வழங்கி மீண்டும் இயல்பு வாழ்க்கைக்கு இட்டுச் செல்ல வேண்டியது அவசியமாகும். இந்த வகையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களான வடமராட்சி, மணற்காடு, குடத்தனை ஆகிய நலன்புரி நிலையங்களில் வாழ்கின்ற மக்களுக்கு தனது சேவையை வழங்கத் தீர்மானித்துள்ளது. இதற்காக சாந்திகம் உளவளத் துணை நிலையத்தின் உளசமூக பயிற்றுவிப்பாளர்களால் சிறப்புப் பயிற்சி பெற்ற பதினைந்து பேரைக் கொண்ட உள சமூக தொண்டர் குழுவினரால் சிறுவர்கள், மாணவர்கள், இளைஞர், யுவதிகள் என்போரை இலக்குக் குழுக் களாகக் கொண்டு உளவியல் சமூக ஆதரவு செயற்திட்டமானது ஆரம்பிக்கப்பட்டது.

சமுதாயத்தில் பெரும்பாலான சிறுவர்கள் உடல் உள ஆரோக் கியத்துடன் வளர்கின்ற போதும், சில பிள்ளைகள் சூழல் காரணங்களால் உள ஆரோக்கியம் குறைந்தவர்களாகக் காணப்படலாம். குறிப்பாகப் பிரச்சினைக்குரிய சூழலில் வாழும் பிள்ளைகள் பல்வேறு நெருக்கீடுகளுக்கு முகம் கொடுக்கிற போது உள ஆரோக்கியம் பாதிக்கப்படலாம். இதில் எல்லாப் பிள்ளைகளுமே உளநலப் பிரச்சினைகளுக்கு உள்ளாவதில்லை. இருந்தபோதிலும் சிலர் சாதாரண உதவிகள் தேவைப்பட்டவர்களாகவும், சிலர் விசேட உளநல கவனிப்புத் தேவைப்பட்டவர்களாகவும் இருப்பர். இவர்களை இனங்கண்டு உதவியளிக்க வேண்டியது எமது கடமை யாகும்.

இதனடிப்படையில் சுனாமியின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட மணற்காடு நலன்புரி நிலையத்தில் வாழ்கின்ற சிறுவர்களின் உள ஆரோக்கிய மேம்படுத்தலை மையமாகக் கொண்டு பல்வேறு செயற்பாடுகள் நடத்தப்பட்டன. பாடல்கள், விளையாட்டுகள், கதைகள் கூறல், வரைதல் என்பவற்றினூடாக மகிழ்ச்சியான சூழலை உருவாக்கி சிறுவர்களின் மனநிலைக் கேற்ப ஆதரவு வழங்கப்பட்டன. இனங்காணப்பட்ட உதவி தேவைப்படும் சில சிறுவர்களுக்குப் பெற்றோர், பராமரிப்பாளர்களின் ஆதரவும் பெற்றுக்கொடுக்கப் பட்டது.

மாணவர்களைப் பொறுத்தவரையில் பிள்ளைப் பருவத்திலிருந்த வளர்ந்தோர் பருவத்துக்கு மாறும் காலம் சாதாரணமாகவே குழப்பம் நிறைந்த காலப்பகுதியாகும். இந்தக் காலப்பகுதியில் ஏற்படுகின்ற சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களின் விளைவானது மேலும் இவர்களைக் குழப்பமடையச் செய்யும். அத்துடன் உடல், உள நடத்தை மற்றும் உறவுகளுக்கிடையில் மாற்றங்களை ஏற்படுத்தும். இத்தகைய சூழ்நிலையில் உளவியல் சமூக ஆதரவு என்பது தேவையான ஒன்றாகும். பல்வேறு இழப்புகளை ஒரே நேரத்தில் சந்தித்தமையால், துக்கத்திலிருந்து உடனடியாக அவர்களால் மீள முடியாத நிலமை காணப்பட்டது.

எனவே, இந்த நிலைமையிலிருந்து அவர்களை விடுவிக்கும் முகமாக பல செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. தனிப்பட்ட முறையில் அவர்களுடன் கதைத்தல், ஒரே வயதுடைய பிள்ளைகளை குழுவாக்கி கலந்துரையாட வைத்தல், விளையாட்டுச் செயற்பாடுகள், இசை, நடனம், நாடகம், வரைதல் போன்ற மாணவர்களின் ஆற்றல் களை வெளிக்கொண்டு வரும் செயற்பாடுகள் என்பன மேற்கொள்ளப்பட்டன. சில மாணவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு விசேட கலந்துரையாடல் மூலம் உதவியும் வழங்கப்பட்டது. அத்துடன், உதவி தேவைப்பட்ட மாணவர்களுக்கு நண்பர்களின் ஆதரவு, குடும்ப ஆதரவு என்பனவும் பெற்றுக் கொடுக்கப் பட்டது.

இளைஞர், யுவதிகள் எமது சமுதாயத்தில் முக்கியமான அங்கத்தவர்களாகக் காணப்படுகின்றனர். ஒரு சமுதாயத்தின் அபிவிருத்தியில் இவர்களின் பங்கு மிக முக்கியமானது. எமது சூழலைப் பொறுத்த வரை பல்வேறு பிரச்சினைகளின் காரணமாக ஏற்பட்ட இடப்பெயர்வு, உயிர்,உடமை இழப்பு, அகதி வாழ்க்கை என்பவற்றால் கல்வியை தொடரமுடியாமை, போதிய தொழிற்கல்வி வசதியின்மை, வேலை வாய்ப்பின்மை, சமூக கலாசார நிகழ்வுகளை இழந்தமை, பொழுது போக்கு அம்சங்கள் இன்மை போன்றவற்றை அனுபவித்து வருகின்றனர். இத்தகைய சூழ்நிலையில் சுனாமி போன்ற அனர்த்தத்தின் விளைவானது மேலும் இவர்களை நிலைகுலையச் செய்துள்ளது. இதனடிப்படையில் எமது சேவை மேற்கொள்ளப்பட்ட பிரதேசத்தில் வாழ்கின்ற இளைஞர், யுவதிகளின் மனநிலையைக் கருத்திற்கொண்டு பல செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இவர்களுக்குத் தனிப்பட்ட ரீதியிலும், குழுச் செயற்பாடுகள் மூலமும் உதவியளிக்கப்பட்டது. அவர்களுக்கு ஏற்பட்ட இழப்புகளின் துக்கத்திலிருந்து விடுபட சமூக கலாசார நிகழ்வுகளில் பங்கு பற்ற வைத்தல், சமூக நிறுவனங்களின் செயற்பாட்டில் இணைத்தல், கல்வி கற்று இடைவிலகியிருந்த இளைஞர், யுவதிகளை தொழிற்கல்வி கற்க ஊக்கப்படுத்தல், சுயமுயற்சிகளை ஊக்குவித்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தனிப்பட்ட உதவி தேவைப்பட்டவர்களுக்கு உதவி வழங்கப்பட்டதுடன், அவர்களுக்கு வேண்டிய ஆதரவும் பெற்றோர், நண்பர்கள், உறவினர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது. இவர்கள் தமக்கு ஏற்பட்ட இழப்புகளின் தாக்கத்திலிருந்து விடுபட்டு இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பியுள்ளதுடன் தமது எதிர்கால வாழ்க்கைக்காக வளர்த்துக்கொள்ள வேண்டிய திறன்களையும் பெற்றுள்ளனர்.

அடுத்ததாக சிறுவர்கள், மாணவர்கள், இளைஞர், யுவதிகள் எமது இலக்கு குழுக்களாக இருந்த போதிலும், இவர்களுக்கான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு வேண்டிய ஆதரவினை பெற்றுக் கொடுப்பதில் முக்கிய பங்கு வகித்தவர்களாக பெற்றோர்களே காணப்பட்டனர். குடும்பத்தில் பெற்றோரின் பங்கு மிக முக்கியமானது. பிள்ளைகளுக்கு ஆலோசனைகள் கூறி சரியான வகையில் வழி நடத்தல் பெற்றோரின் பொறுப்பாக உள்ளது. எனவே அடிப்படையில் பெற்றோர் உள ஆரோக்கியம் உடையவர்களாக இருத்தல் அவசியம். எனினும் சுனாமி போன்ற நெருக்கீட்டை ஏற்படுத்தும் அனர்த்தங்கள் பெற்றோரையும் பாதிக்கலாம். இத்தகைய சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்குரிய வழிவகைகளை இனங்காட்டுவது அவசியமாகும். இதனைக் கருத்திற் கொண்டு எமது சேவை மேற்கொள்ளப்பட்டது. கலந்துரையாடல்கள், விழிப்புணர்வுக் கருத்துகள் வழங்கல் என்பன செய்யப்பட்டன.



இந்த வகையில் பார்க்கும் போது **REERDO** நிறுவனத்தின் பல்வேறு செயற்திட்டங்களில் சுனாமி உளவியல் சமூக ஆதரவு வேலைத் திட்டமானது ஆரம்பிக்கப்பட்டு இயன்றளவு பல்வேறு மட்டத்தில் உதவிகளைச் செய்துள்ளது. எமது சேவை முடிவுறுகின்ற கால கட்டத்தில் அந்தப் பிரதேச வாழ் மக்கள் மனந்திறந்து எம்முடன் தமது உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டனர்.எமது சந்திப்பால் தாம் மிகுந்த ஆறு தலடைந்ததாகக் கூறினர்.

சிறுவர்கள், மாணவர்கள் எமது சேவைக்கு மிகுந்த ஒத்துழைப்புத் தந்து உதவினர். இளைஞர், யுவதிகள் மற்றும் பெற்றோர் எமது சந்திப்பை பெரிதும் வரவேற்றதோடு எமது சேவையால் மிகுந்த சந்தோசத்தையும், மனத்திருப்தியையும் அடைந்ததாகக் கூறினர். பெற்றோர், பிள்ளைகளுக்கு மேற்கொண்ட பல்வேறு செயற்பாடுகளை ஊக்கப்படுத்தினர். இவையெல்லாம் எமது சேவைக்குக் கிடைத்த வெற்றியாகும்.

தீ.ஜெயக்குமார்

# யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட கனிஷ்ட பிரிவுக்கான மெய்வல்லுநர் போட்டி முடிவுகள்!

யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கம் மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நேற்றுமுன்தினம் யாழ். பொது விளையாட்டு மைதானத்தில் நடத்திய கனிஷ்ட பிரிவுக்கான மெய் வல்லுனர் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம் :

### 16 வயதுப் பிரிவு ஆண்

**100 மீற்றர் ஓட்டம்**

ஆர்.நிதுஷாந் (நெல்லியடி மகா வித்தியாலயம்), கே.ரூபவினோத் (யாழ். இந்துக் கல்லூரி),எம்.மயூரன் (யாழ். மத்திய கல்லூரி)

**200 மீற்றர் ஓட்டம்**

ஆர்.நிதுஷாந் (நெல்லியடி மகா வித்தியாலயம்), கே.ரூபவினோத் (யாழ். இந்துக் கல்லூரி), வை.துஷிந்தன் (யாழ். இந்துக் கல்லூரி)

**400 மீற்றர் ஓட்டம்**

எம்.மயூரன் (மத்திய கல்லூரி), ரி.சிவகரன் (மத்திய கல்லூரி), வி.கிருஷ்ணகுமார் (தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகம்)

**100 மீற்றர் தடைதாண்டல்**

பி.கேதீசன் (புனித பத்திரிசியார் கல்லூரி), ரி.சிவகரன் (யாழ். மத்திய கல்லூரி), கே.ரூபவினோத் (யாழ். இந்துக் கல்லூரி)

**நீளம்பாய்தல்**

எம்.கஜன்ராஜ் (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), எம்.மயூரன் (யாழ். மத்திய கல்லூரி), ரி.சிவகரன் (யாழ். மத்திய கல்லூரி),

**உயரம் பாய்தல்**

எம்.மயூரன் (யாழ். மத்திய கல்லூரி),

**குண்டெறிதல்**

வி.கரிகரன் (ஹாட்லிக் கல்லூரி), ஜெ.சிந்துஜன் (ஹாட்லிக் கல்லூரி), வீ.கிருஷ்ணகுமார் (வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்),

**தட்டெறிதல்**

வீ.கரிஹரன் (ஹாட்லிக் கல்லூரி), ஜெ.ஜஸ்ரின் டயோ (வசாவிளான் மகா வித்தியாலயம்), ஜெ.சிந்துஜன் (ஹாட்லிக் கல்லூரி),

**ஈட்டியெறிதல்**

ஜெ.சிந்துஜன் (ஹாட்லிக் கல்லூரி), ரி.மயூரன் (ஹாட்லிக் கல்லூரி), ரி.நிரோஷன் (யாழ். மத்திய கல்லூரி),

### 16 வயதுப் பிரிவு பெண்

**100 மீற்றர் ஓட்டம்**

ஆர்.வாகினி (வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை), பி.சிந்துஜா (அத்தியார் இந்துக் கல்லூரி), ரி.சந்திரகலா (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை)

**200 மீற்றர் ஓட்டம்**

ஆர்.வாகினி (வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை), பி.சிந்துஜா (அத்தியார் இந்துக் கல்லூரி), என். உஷாந்தினி (அத்தியார் இந்துக் கல்லூரி),

**400 மீற்றர் ஓட்டம்**

எஸ்.ஜெயபவானி (யாழ்ப்பாணக் கல்லூரி), ஆர்.வாகினி (வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை), பி.சிந்துஜா (அத்தியார் இந்துக் கல்லூரி)

**100 மீற்றர் தடைதாண்டல்**

ஆர்.வாகினி (வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை), பி.சிந்துஜா (அத்தியார் இந்துக் கல்லூரி), சௌமிகா (அத்தியார் இந்துக் கல்லூரி)

**நீளம் பாய்தல்**

வி.கஜிதா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி),பி.சிந்துஜா (அத்தியார் இந்துக் கல்லூரி), எ.மொறின் (திருக்குடும்பக் கன்னியர் மடம்)

**உயரம் பாய்தல்**

வி.கஜிதா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), எ.மொறின் (திருக்குடும்பக் கன்னியர் மடம்)

**தட்டெறிதல்**

சௌமிகா (அத்தியார் இந்துக் கல்லூரி), சாமினி (அத்தியார் இந்துக் கல்லூரி), சுஜந்தினி (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை)

**குண்டெறிதல்**

சௌமிகா (அத்தியார் இந்துக் கல்லூரி), சாமினி (அத்தியார் இந்துக் கல்லூரி),

**ஈட்டியெறிதல்**

எ.மொறின் (திருக்குடும்பக் கன்னியர் மடம்), வி.கஜிதா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), எஸ்.சாமினி (அத்தியார் இந்துக் கல்லூரி)

### 18 வயது ஆண்

**100 மீற்றர் ஓட்டம்**

ஜெ.தர்சன், கே.சுதர்ஷனன்

**200 மீற்றர் ஓட்டம்**

கே.சுதர்ஷனன், கே.முரளிதரன் (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), சாருஜன் (அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம்)

**400 மீற்றர்**

கே.சுதர்ஷனன், ஆர்.சேந்தன் (புனித பத்திரிசியார் கல்லூரி)

**800 மீற்றர்**

கே.சுதர்ஷனன், ஆர்.சேந்தன் (புனித பத்திரிசியார் கல்லூரி), கே. செந்தூரன் (வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்)

**1500 மீற்றர்**

கே.சுதர்ஷனன், கே.செந்தூரன் (வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), ஆர்.சேந்தன் (புனித பத்திரிசியார் கல்லூரி)

**110 மீற்றர் தடைதாண்டல்**

ஜெ.ஜதுர்ஷன், ஐ.ஜக்ஷன் (புனித பத்திரிசியார் இந்துக் கல்லூரி), அன்ரன் தோமஸ் (யாழ். இந்துக் கல்லூரி)

**நீளம் பாய்தல்**

ஐ.ஜக்ஷன் (புனித பத்திரிசியார் இந்துக் கல்லூரி), சியாம்குமார் (யாழ். இந்துக் கல்லூரி), எம்.சாருஜன் (அரியாலை விளையாட்டுக் கழகம்)

**உயரம் பாய்தல்**

கே.நிவாந்தன் (புனித பத்திரிசியார் கல்லூரி)

**முப்பாய்ச்சல்**

ஐ.ஜக்ஷன் (புனித பத்திரிசியார் கல்லூரி)

**குண்டெறிதல்**

துமீசன் (யாழ். இந்துக் கல்லூரி), அரவிந்தன், ஏ.டினோஷன் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை),

**தட்டெறிதல்**

ரி.சுகந்தன் (தும்பளை சிவப்பிரகாசம் வித்தியாலயம்), ஏ.டினோஷன் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை), கே.நிவாந்தன் (புனித பத்திரிசியார் கல்லூரி),

**ஈட்டியெறிதல்**

ரி.சுகந்தன் (தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்), எஸ்.துமிஷன் (யாழ். இந்துக் கல்லூரி), ஏ.டினேஷன் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை),

### 18 வயது பெண்

**100 மீற்றர் ஓட்டம்**

யு.தர்ஷினி (அத்தியார் இந்துக் கல்லூரி), ரி.மிதிலா (அத்தியார் இந்துக் கல்லூரி)

**200 மீற்றர் ஓட்டம்**

எஸ்.சியானுகா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), கே.கோபிகா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), எஸ்.றொசானி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

**400 மீற்றர் ஓட்டம்**

ரி.திருமகள் (யூனியன் கல்லூரி), ரி.மதுராந்தினி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), பி.பக்ஷலா (அத்தியார் இந்துக் கல்லூரி)

**800 மீற்றர் ஓட்டம்**

திருமகள் (யூனியன் கல்லூரி)

**1500 மீற்றர் ஓட்டம்**

திருமகள் (யூனியன் கல்லூரி), எஸ். ஜெயபவானி (யாழ்ப்பாணக் கல்லூரி)

**நீளம் பாய்தல்**

ஆர்.நிலானி (யூனியன் கல்லூரி), யு.தர்ஷினி (அத்தியார் இந்துக் கல்லூரி), எஸ்.நிறோஜினி (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை),

**உயரம் பாய்தல்**

மிதிலா (அத்தியார் இந்துக் கல்லூரி)

**முப்பாய்ச்சல்**

நிலானி (யூனியன் கல்லூரி)

### 20 வயது ஆண்

**100 மீற்றர் ஓட்டம்**

அ.அன்ரன் ரஜீம்ராஜ் (யாழ்ப்பாணக் கல்லூரி), பி.நிஷாந்தன், ரி.கஜந்தன் (காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம்)

**200 மீற்றர் ஓட்டம்**

விமல்ராஜ் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை), பி.நிஷாந்தன், ரி.கஜந்தன் (காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம்)

**400 மீற்றர்**

பி.நிசாந்தன், பி.தனுஷியன் (தொண்டமனாறு ஐக்கிய விளையாட்டுக் கழகம்),

**800 மீற்றர் ஓட்டம்**

ரி.கவிராஜ் (ஐக்கிய விளையாட்டுக் கழகம்), பி.தனுஷியன் (தொண்டமனாறு ஐக்கிய விளையாட்டுக் கழகம்), சி.விக்ரர் (புனித பத்திரிசியார் கல்லூரி)

**1500 மீற்றர் ஓட்டம்**

ப.கவிராஜ் (காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம்)

**நீளம் பாய்தல்**

ஏ.அன்ரன் றொமிராஜ், கே.சாந்தகுமார், எஸ்.சசிகுமார் (தொண்டமனாறு ஐக்கிய விளையாட்டுக் கழகம்)

**முப்பாய்ச்சல்**

ஏ.அன்ரன் றொமிராஜ், ரி.கஜந்தன் (காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம்), ஏ.சதீஸ்குமார்.

**குண்டெறிதல்**

அன்ரோய் சம்ஷன் (புனித பத்திரிசியார் கல்லூரி), ஏ.சுரேந்திரன், வி.சுஜிவன் (வசாவிளான் மகா வித்தியாலயம்)

**தட்டெறிதல்**

அன்ரோய் சம்ஷன் (புனித பத்திரிசியார் கல்லூரி), எஸ்.பிரஷாந்த் (காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம்),

### 20 வயது பெண்

**100 மீற்றர்**

எஸ்.சியானுகா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), பி.டினோஜினி (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை)

**200 மீற்றர்**

பி.டினோஜினி (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை),

**400 மீற்றர்**

பி.டினோஜினி (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை), எஸ்.சியானுகா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), எஸ்.றொசானி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

**100 மீற்றர் தடைதாண்டல்**

எஸ்.றொசானி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஜெ.சிறிசந்தியா (அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம்)

# உயரமான கட்டடத்தில் மோத குட்டி விமானத்தை கடத்திய நபர்!

வெலிங்டன் —

நியூஸிலாந்து நாட்டில் நாடாளுமன்றத் தேர்தல் நேற்றுமுன்தினம் நடந்தது. இதில் அரசியல் கட்சித் தலைவர்கள் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். அந்த நேரத்தில் அங்குள்ள முக்கிய நகரங்களில் ஒன்றான ஒக்லாண்ட் நகரில் ஒரு பரபரப்புச் சம்பவம் நடந்தது.

வானில் பறந்த குட்டி விமானத்தில் இருந்து ஒரு விமானி அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு பேசினார்.

விமான நிலையத்தில் நின்ற சிறிய விமானத்தைக் கடத்தி வந்துவிட்டேன். இந்த விமானத்தை ஒக்லாண்ட் நகரில் இருக்கும் 1 140 அடி உயர கோபுர கட்டத்தின் மீது மோதப்போகிறேன் என்று கூறினார். அந்தக் கட்டடத்தில் பிரபல ஹோட்டல் மற்றும் வியாபார வளாகங்கள் இருக்கின்றன. இந்த மிரட்டலைத் தொடர்ந்து கட்டடத்தில் இருந்தவர்கள் அவசரஅவசரமாக வெளியேற்றப்பட்டனர்.

இதற்கிடையில் அந்த விமானம் அங்குள்ள துறைமுகப் பகுதியில் விழுந்து நொருங்கியது. அந்த விமானத்தில் இருந்த விமானி ஆபத்தான நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டார்.




# நியூ ஓர்லியன்ஸ் மாகாண நீரில் எவ்வித நச்சுக் கலப்பும் இல்லை!

## நிபுணர்கள் தெரிவிப்பு

வொஷிங்ரன் —

கத்ரீனா சூறாவளி தாக்கிய நியூ ஓர்லியன்ஸ் மாகாணத்தில் வெள்ளப் பெருக்கினால் சேதம் ஏற்பட்டபோதும் நச்சுக்கலப்பு உருவாகவில்லை என நிபுணர்கள் தெரிவித்தனர்.

அமெரிக்காவில் நியூ ஓர்லியன்ஸ் பகுதியை அண்மையில் வீசிய சூறாவளி புரட்டிப்போட்டது. அங்கு நீரில் நச்சுக்கலப்பு இருக்கும் என்ற அச்சம் நிலவியது. தற்போது அங்கு கழிவு நீரின் தேக்கம் உள்ளதே தவிர நீரில் நச்சுத்தன்மை இல்லை என நிபுணர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து நோய்த் தடுப்புக்கான பொதுச் சுகாதார ஆய்வாளர் ஜெரி பென்னர் கூறுகையில் -

சுகாதாரத்துக்கு நீண்டகால பாதிப்பை ஏற்படுத்தும் எந்த வாய்ப்பும் இல்லை எனத் தெரிவித்தார்.

கழிவுநீர் நீரேற்று நிலையங்கள் பழுதடைந்திருப்பதால் கழிவு நீர் தேக்கம் அதிகரித்துள்ளது. மக்கள் கழிவுநீரை குடிக்காமலோ அதில் மூழ்காமலோ இருந்தால் பெரிய பாதிப்பில்லை என்று சுகாதார நிபுணர்கள் தெரிவித்தனர்.

பக்டீரியாக்களின் அளவு அதிகரித்துள்ளபோதும் பெரியளவில் நோய் தாக்கும் அபாயமில்லை.

ஜெபர்சன் பரிஷ் பகுதியில் நீர் மாசுபடவில்லை என்றாலும் அங்கு குழாயில் கிடைக்கும் நீரைக் குடிக்க பயன்படுத்தவேண்டாமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. நீரில் உலோக கலப்பு இருந்தபோதும் அது அபாயகரமான அளவில் இல்லை. இது வரை நடந்த சோதனைகளில் நீரில் எண்ணெய், உலர் சலவைக்கு பயன்படும் திரவங்கள், பென்சீன் போன்ற ரசாயனங்கள் இருப்பதற்கான ஆதாரமில்லை. அவ்வாறு இருந்தாலும் அவை சூரிய ஒளியில் காய்ந்தால் அபாயமில்லை. எண்ணெய் கசிவுகளை அப்பகுதியிலிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கையை சுகாதாரப் பிரிவு ஆரம்பித்துள்ளது.

அமெரிக்க கடலோர காவல் படையினர் கூறுகையில் -

கத்ரீனா சூறாவளிக்கு பிறகு லூசியானா மாகாணத்தில் ஆறு முக்கிய எண்ணெய் கசிவுகள் தவிர்க்கப்பட்டன. மிசிசிபி நதியில் அவை கலப்பது தவிர்க்கப்பட்டது. நியூ ஓர்லியன்ஸ் கிழக்கு பகுதியில் மார்பி எண்ணெய் கம்பனிக்குச் சொந்தமான சுத்திகரிப்பு நிலையம் உட்பட பல்வேறு இடங்களில் ஒரு லட்சத்து 60 பரல்களில் எண்ணெய் கசிவு இருந்தது. அவற்றில் 50 ஆயிரம் பரல்கள் மீட்கப்பட்டன எனத் தெரிவித்தனர்.

### இரத்ததானம் – உயிர்காப்பது உன்னதமானது

- சடுதியான பெருமளவான குருதிப் பெருக்கினால் உயிர்பிரிவதை இரத்தம் ஏற்றித் தடுக்கலாம்
- குருதி உறையா நோய், குருதிச்சோகை, டெங்குக்காய்ச்சல் போன்றவற்றுக்கு குருதியை பலகூறுகளாகப் பிரித்து ஏற்றி பலரின் வாழ்வை நீடிக்கலாம். வளமாக்கலாம்.
- வலிமைமிக்க புற்றுநோய் (கான்சர்) சிகிச்சைகளுக்கு புற்றுநோயாளரின் உடல் தாக்குப்பிடிப்பதற்கு அடிக்கடி இரத்தக்கூறுகளை ஏற்றி வாழ்வை நீடிக்கலாம்.
- பிறந்த குழந்தைக்கு ஏற்படும் மஞ்சள்காமாலை நிலையின் பாதிப்பிலிருந்து பாதுகாக்க உடல் இரத்தத்தை முழுமையாக அகற்றி புதிய இரத்தம் ஏற்றப்படலாம்.

இரத்த வங்கி, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# திருமலையில் கரையொதுங்கிய ஒன்றரை அடி உயரமான சிலை!



திருகோணமலை —

திருகோணமலை உட்துறைமுகப் பகுதியில் ஒன்றரை அடி உயரமான சிலையொன்று கரையொதுங்கியுள்ளது. நேற்றுமாலை இந்தச் சிலை கரையொதுங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனைப் பார்வையிடுவதற்காக மக்கள் கூடியமை காரணமாக துறைமுக வீதியில் போக்குவரத்துப் பிரச்சினை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த சிலையைப் பொலிஸார் எடுத்துச் சென்றனர். குறித்த சிலை சிவன் திருவுருவத்தை ஒத்ததாக தெரிவிக்கப்படுகின்ற அதே நேரம் - அகத்தியரின் உருவம்போல் இருப்பதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

## குறுகிய காலத்துக்குள்...

அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

18 வருடங்களுக்கு முன்னர் லெப். கேணல் தியாகி திலீபன் கூறிய வார்த்தைகள் - திலீபனின் கனவு நனவாகும் சூழ்நிலை இன்று நெருங்கிக் கொண்டிருக்கிறது.

தேசியத் தலைவரின் தீர்க்கமான திட்டமிடலும், படைக்கட்டமைப்பும், படைக்கட்டமைப்புக்குத் துணை கொடுக்கின்ற துணைப்படை வலைப் பின்னலும் பல வெற்றிகளைத் தேடித் தந்துள்ளன.

தரையிலும் சரி - கடலிலும் சரி பழிக்குப்பழி என பல வெற்றிகளைக் குவித்து துரித வளர்ச்சியைப் பெற்று வந்த விடுதலைப் புலிகள் கடந்த மூன்றரை வருடங்களாக அமைதியைப் பேணிவருகின்றனர். அதாவது முடக்கப்பட்டுள்ளனர்.

தென்னிலங்கையில் இன்று போருக்கு அறைகூவும் அரசியல் தலைமைகள் கூட்டுச்சேர்ந்துள்ளன. இந்தக் கூட்டின் எதிர்த்தரப்பார் என்ன செய்வார்கள் என்பதும் தலைவருக்குத் தெரியும். அவரின் ஆழமான பார்வையில் கடற்புலிகளின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகள் மற்றும் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ளவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தலைவரின் சிந்தனைக்கு ஏற்ப ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு வடிவம் கொடுக்கப்பட்டு இவ்வாறான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இனிமேல் மேற்கொள்ளப்படுகின்ற இராணுவப் பாய்ச்சல்கள் குறுகிய காலத்தில் வெற்றியைப் பெற்றுத் தரவேண்டும் என்ற நோக்கிலேயே எமது நகர்வுகள் ஒவ்வொன்றும் தலைவரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சமாதானத்தைக் கொண்டுவரும் எண்ணம் அரசுக்கு இல்லை. அரசியல் கதிரைகளில் இருக்கும்போது நேரத்துக்கு நேரம் ஒரு கதை சொல்லிக்கொண்டு - சர்வதேசத்தையும் ஏமாற்றிக்கொண்டு தங்களது படைப் பலத்தை அதிகரிக்கும் நடவடிக்கையிலேயே ஈடுபட்டு வருகின்றனர். அரசுத் தலைமை எமக்கு வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் உதவிகளைத் தடுத்து நிறுத்தும் பிரசார நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டு வருகிறது.

மேலும் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் எமது உறவுகள் பொருளாதார ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் எமது தலைவரின் கரத்தைப் பலப்படுத்துவதற்கு முன்வர வேண்டும். இதன்மூலம் போராட்டத்தை வலுப்படுத்திக்கொள்ளமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (122)

### ஐ.தே.க...

செய்யும் நோக்கில் - பிரசார நடவடிக்கைகளை நாடு முழுவதும் செயற்படுத்துவதற்காகவே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு யாராவது வெளிநாடு செல்வதாயின் ரணில் விக்கிரமசிங்கவின் முன் அனுமதி பெற்றே செல்ல வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடு செல்வதற்கு அந்தக் கட்சியின் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேனவால் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தே)

### பொலிஸ்...

வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது குறித்து குற்றவியல் விசாரணைத் திணைக்களம் சட்டமா அதிபரிடம் தெரிவித்துள்ளதாவது-

கொலை செய்யப்பட்ட யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சாள்ஸ் விஜேவர்த்தனவின் வழக்கு விசாரணை மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் இடம்பெற்று வருகின்றது. ஆனால், இப்பகுதி விடுதலைப் புலிகள் மிக அதிகமாக உள்ள இடமாகும். இதனால் இந்த வழக்கு விசாரணை தொடர்பாக விடுதலைப்புலிகளால் பாரிய அச்சுறுத்தல்கள் உள்ளது. எனவே இந்த வழக்கு விசாரணையை கொழும்புக்கு மாற்றுமாறு கேட்டுக் கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### உதவி...

உடன்பாடு நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் நிலைமை குறித்து ஆராயப்படவுள்ளது.

அத்துடன், இலங்கையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் நிறைவடையும் வரை போர்நிறுத்தத்தை இரண்டு தரப்பும் உரிய வகையில் கடைப்பிடிக்கவேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேநேரம் இலங்கையில் புதிதாக தெரிவுசெய்யப்படும் ஜனாதிபதி சமாதானத்தை முன்கொண்டு செல்ல வேண்டும் என்றும், அதைப் பொறுத்தே எதிர்காலத்தில் இலங்கைக்கு உதவி வழங்குவது குறித்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்ற தீர்மானமும் மேற்கொள்ளப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## கட்டுநாயக்க விமானநிலைய விசேட விருந்தினர் பகுதிக்குள் திடீரென பிரவேசித்த இளைஞர்

கொழும்பு —

கட்டுநாயக்க விமான நிலையத்தில் பார்வையாளர் தளத்திற்கு வந்திருந்த இளைஞர் ஒருவர் விசேட விருந்தினர்கள் வருகை தரும் இடத்திற்குள் பிரவேசித்த பரபரப்பான சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

தம்புள்ளையைச் சேர்ந்த 18 வயதான சிங்கள இளைஞரான இவர் பார்வையாளர் தளத்தில் இருந்து கூரையின் மீதேறி விசேட விருந்தினர்கள் வருகைதரும் இடத்திற்குள் பிரவேசித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட அவர், தற்சமயம் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

இவர் கூரையின் மீதேறி விசேட விருந்தினர்கள் வருகைதரும் தளத்திற்கு பிரவேசித்தமை விமான நிலைய பாதுகாப்பு தரப்புக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கட்டுநாயக்க விமான நிலையத்தில் அதியுயர் பாதுகாப்புக்கு மத்தியில் இவ்வாறான சம்பவம் ஏற்பட்டுள்ளமை குறித்து விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன.

குறித்த இளைஞர், வெளிநாட்டுக்கு பணிப்பெண்களை அனுப்பும் நோக்கில் விமான நிலையத்திற்கு அடிக்கடி வந்து செல்லும் ஒருவர் என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (01)

### மேதானந்த...

உரையாற்றிய எல்லாவெல மேதானந்த தேரர், ஜனாதிபதி சந்திரிகா நாட்டைப் பிளவுபடுத்த முயற்சிப்பதாகக் குற்றஞ்சாட்டினார்.

ஜனாதிபதியின் நடவடிக்கைகளைக் கடுமையாக விமர்சித்து மேதானந்த தேரர் ஆற்றிய உரை அமெரிக்காவிலுள்ள ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேதானந்த தேரரின் உரை அடங்கிய ஒலிநாடாவை அமெரிக்கா சென்றுள்ள அமைச்சர்களுடன் ஜனாதிபதி சந்திரிகா கேட்டுள்ளார்.

அந்த உரையில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில் மேதானந்த தேரருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுப்பது தொடர்பாக ஜனாதிபதி சட்ட ஆலோசனை பெற்றுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### மட்டக்களப்பு...

கனகன் என்ற இளைஞரே கொல்லப்பட்டவராவார். வாகனேரிக்கும் புனானைக்கும் இடையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த இளைஞர் புலிகளின் ஆதரவாளர் என்றும் - இவரை கருணா குழுவைச் சேர்ந்தவர்களே சுட்டுக்கொன்றிருக்கலாம் என்றும் இராணுவத் தரப்பு தெரிவித்துள்ளது.

## பல்லாயிரம் பேர் திரண்ட ஐ.தே.க சம்மேளன கூட்டம்!

கொழும்பு —

ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட சம்மேளன மாநாடு கொழும்பு நகர சபை மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இதில் பல்லாயிரக்கணக்கான ஐ.தே.க. ஆதரவாளர்கள் திரண்டிருந்தனர். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளைத் தெளிவுபடுத்தும் வகையிலேயே இந்த மாநாடு கூட்டப்பட்டிருந்தது. (01)

## ரணிலின் பிரசாரத்துக்கு அமெரிக்க ஆலோசகர்கள்

கொழும்பு —

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் பிரசார நடவடிக்கைகளுக்கு ஆலோசகர்களாக அமெரிக்காவைச் சேர்ந்த ஆறு பேர் இலங்கைக்கு வந்துள்ளனர் என கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இவர்கள் அமெரிக்காவிலுள்ள பிரபல வர்த்தக நிறுவனங்களின் அதிகாரிகள் என்றும், இவர்களது ஆலோசனைப்படி எதிர்வரும் வாரங்களில் பரந்தளவிலான சுவரொட்டி இயக்கத்தை நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (தே)

## திருமலையில் படையினர் மீது கைக்குண்டுத் தாக்குதல்!

திருகோணமலை —

திருகோணமலை - நிலாவெளியில் இராணுவத்தினர் மீது நேற்றுக் காலை இனந்தெரியா தோரால் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்றுக்காலை 6.10 மணியளவில் நிலா வெளி சர்வோதய கட்டடம் அருகே கடமையில் இருந்த படையினர் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

எனினும் வீசப்பட்ட குண்டு வெடிக்காததால் சேதம் எதுவும் ஏற்படவில்லை. உடனடியாகப் பதிலுக்குத் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்ட போதும், தாக்குதல் நடத்தியோர் தப்பிச் சென்றுவிட்டதாக படையினர் தெரிவித்தனர்.

அதேவேளை, திருமலை மட்கோ பகுதியில் இராணுவக் காவலரண் மீது நேற்றுமுன்தினம் இரவு 7.55 மணியளவில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும் படையினர் தெரிவித்தனர்.

### ஜனாதிபதி...

ஆணையாளர் நீதிமன்றில் விளக்கம் கேட்டார். ஆனால் அவரது கோரிக்கையை நிராகரித்த நீதிமன்றம் தீர்ப்புக்களில் எவ்வித தவறும் இல்லையென்று விளக்கமளித்தது.

இந்தநிலையில் தேர்தல் ஆணையாளர் திஸநாயக்கவின் சட்டத்தரணி எல்மோ பெரேரா கூறுகையில் -

இந்தத் தீர்ப்பிற்கு கூடுதல் விளக்கம் அறிய தேர்தல் ஆணையாளர் முடிவுசெய்துள்ளார். அதனால் ஜெனீவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனிதஉரிமைகள் அமைப்பிடம் இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்க உள்ளார் என்று கூறினார்.

## அமெரிக்காவிலிருந்து திரும்பியதும்...

அமெரிக்க பயணம் முடிந்து நாடு திரும்பிய பின்னர், மகிந்த ராஜபக்சவின் அரசியல் செயற்பாடுகள் தொடர்பாக நியூயோர்க்கில் வைத்து, தனது சகோதரரான அனுரா பண்டாரநாயக்கவுடன் விரிவான பேச்சுக்களை சந்திரிகா நடத்தியுள்ளார்.

நாடு திரும்பியதும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவை கூட்டவும், சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருக்கான கொள்கைப் பிரகடனத்தை மத்திய குழுக் கூட்டத்தின்போது தயாரிக்கவும் - அந்தக் கூட்டத்தில் முடிவு மேற்கொள்ளப்பட்டது.

சுதந்திரக் கட்சியின் வேட்பாளரான மகிந்த ராஜபக்ச, அந்தக் கொள்கைப் பிரகடனத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால் பிரதமர் வேட்பாளரான அனுரா பண்டாரநாயக்கவையோ அல்லது வேறு ஒருவரையோ சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக நிறுத்துமாறு சந்திரிகாவுக்கு ஆலோசனை வழங்கப்பட்டதாகவும் - அதை சந்திரிகாவும் ஏற்றுக்கொண்டதாகவும் தெரிகிறது.

மகிந்த ராஜபக்ச தனது தனிப்பட்டஅரசியல் நிகழ்ச்சி நிரலை செயற்படுத்துவதால், நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு பொதுத் தேர்தலொன்றை நடத்துமாறு சந்திரிகாவுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

அத்துடன், பிரதமருக்கு எதிராகப் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதால் அவரை அந்தப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு வேறொருவரை அந்தப் பதவிக்கு நியமித்து புதிய அமைச்சரவையொன்றை உருவாக்கவும் சந்திரிகா முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

சுனாமி நிவாரண சபையை பிரதமர் ரத்துச்செய்யத் தீர்மானித்திருப்பது குறித்து அவருக்கெதிராக கட்சியினுள் ஒழுங்கீன குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

அது தவிர ஹெல்பிங் அம்பாந்தோட்டை விடயம், வீதி அபிவிருத்தித் திட்ட நிதி விவகாரம், பெருந்தெருக்கள் அமைச்சின் சில செயற்பாடுகள் குறித்து ஜனாதிபதி சந்திரிகாவுக்கு மகிந்த ராஜபக்ச பதிலளிக்க வேண்டியிருக்கும் என்றும் ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஆயிரம் பெண்கள் ஒன்று...

உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் கருத்துத் தெரிவிக்கையில் -

பொங்கு தமிழ் என்பது தமிழ்மக்கள் அடிமைத்தனத்திலிருந்து மீண்டு, அவர்களின் அபிலாஷைகளை வெளியுலகிற்குத் தெரியப்படுத்தும் ஒன்றாகும். மக்களுக்கு தமது சுதந்திரம் தொடர்பாக பல ஆசைகள் இருக்கின்றன. அவற்றைத் தனித்தனியே சர்வதேசத்திற்கு சொல்லிக்கொண் டிருக்க முடியாது.

இதற்கமைய தமிழ்மக்கள் எல்லோரும் ஒன்றுதிரண்டு தமது அபிலாஷைகளை சர்வதேசத்திற்கு ஒருமித்து வெளிப்படுத்துவது பொங்கு தமிழின் நோக்கமாகும்.

எமது ஒட்டுமொத்த அபிலாஷைகளை சர்வதேசத்திற்கு எடுத்துச்சொல்வதன் மூலம் எமது சுயநிர்ணய உரிமையை சர்வதேசம் உணர்ந்துகொள்ளும். இதன்மூலம் சிங்கள ஏகாதிபத்தியத்தின் கபடநாடகம் வெளியுலகிற்குத் தெரியவரும்.

ஆகவே, பொங்கு தமிழ் நிகழ்வை மக்கள் உணர்வுபூர்வமாக அறிந்து அதில் பங்கெடுக்க வேண்டும். தமிழ் மக்கள் சுதந்திரத்துடன் வாழ்கின்றனர் என சிங்கள அரசியல் தலைவர்கள் சர்வதேசத்திற்கு பொய்ப்பிரசாரம் செய்கின்றனர்.

இதேவேளை - இராணுவ ரீதியாக போராட்டத்தில் ஈடுபட்டுவந்த விடுதலைப் புலிகள் - சமாதானம் ஒன்றை விரும்பமாட்டார்கள் என்பதை சொல்லிவந்த சிங்களத் தலைமைகள் - அவர்களின் இராணுவ பலம் கண்டு விடுதலைப் புலிகளால் விடுக்கப்பட்ட சமாதானப் பேச்சுக்கு உடன்பட்டனர்.

மூன்றரை ஆண்டுகளாகியும் தமிழ்மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை. இதற்கமைய இனியும் பொறுமைகாக்க முடியாது என புரிந்துகொண்ட மக்கள், வவுனியாவில் தமிழ்த் தேசிய அரசுக்கான பிரகடனத்தைச் செய்தனர். இதற்கமையவே யாழ்ப்பாணத்திலும் பொங்கு தமிழ் நிகழ்வு நடைபெறவுள்ளது. இதற்கு பெண்களின் முழுமையான பங்களிப்பு வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த பெண்கள் எழுச்சி நிகழ்வில் கலந்து கொண்ட பெண்கள் அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள பொங்கு தமிழ் எழுச்சிப்பிரகடன நிகழ்வில் ஒரு லட்சம் பெண்கள் கலந்து கொள்ள முன்னின்று உழைப்பதாக உறுதியெடுத்துக் கொண்டனர்.

குருதிக்கொடையாளர் கௌரவிப்பு விழா
2005 செப்ரெம்பர் 21
உன் உதிரம் பிறர் உயிர் காக்கும்
இடம் : வீரசிங்கம் மண்டபம் நேரம் : காலை 9.00 மணி

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 19.09.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.